பக்கங்கள்: 14 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 11 வெள்ளிக்கிழமை 25.06.2021 கதிர் 232

## இனி இது ரகசியம் அல்ல!

அரசியலில் 'கிழட்டு நரி' என வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றுக்கு வந்தமையும், அவரது முதல் நாடாளுமன்ற உரையும் தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தாமல் இல்லை.

ரணிலின் பக்கம்02 »

# தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் நேற்று விடுதலை

### பொசன் பூரணை தினத்தில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு



(ந. லோகதயாளன், இ.கலையமுதன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ்கைதுசெய்யப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 16 பேர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் நேற்று விடுதலை செய்யப்பட்டனர் என்று சிறைச்சாலைகள் திணை ☞2

## மரணதண்டனைக் கைதியான துமிந்த சில்வாவும் விடுதலை!

### ஜனாதிபதி விசேட பொதுமன்னிப்பு



மரண தண்டனைக் கைதி துமிந்த சில்வாவும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ☞2

# துமிந்தவின் விடுதலை சட்ட ஆட்சியை குறைமதிப்புக்கு உட்படுத்தும் செயல்!



## அமெரிக்கத் தூதுவர் காட்டம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதியான துமிந்த சில்வா, ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் கீழ் நேற்று விடுதலை செய்யப்பட்டமை குறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

உயர்நீதிமன்றம் படுகொலைக் குற்றவாளியாக உறுதி செய்த ஒருவரை விடுதலை செய்வது இலங்கையின் சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்புக்கு உட்படுத்தும் செயலாகும் என்று அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். ☞2

## துமிந்த சில்வாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கிடைத்துள்ளது நியாயம்

### இப்படிக் கூறுகின்றார் நாமல்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்கப்பெற்றுள்ளது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வா ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டது தொடர்பில் ஊடகங்களுக்குக் ☞2

## ஐ.நா. மனித உரிமை அலுவலகம் துமிந்த விடுதலைக்கு கண்டனம்

### கோட்டாவின் தன்னிச்சையான செயலுக்கு மற்றொரு எடுத்துக்காட்டு எனவும் சாடல்

கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டு நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்தா சில்வா ஜனாதிபதியால் பொது மன்னிப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டமையை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் கண்டித்துள்ளது.

சக அரசியல்வாதியை சுட்டுக் கொலை செய்த குற்றத்துக்காக தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு இலங்கை ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளித்தமை அவரது ☞2



## நாடு திரும்பிய பஸில் ராஜபக்ஷ

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி செயலணியின் தலைவரும் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் ஸ்தாபகருமான பஸில் ராஜபக்ஷ நேற்று அதிகாலைநாடுதிரும்பியுள்ளார்.

இவர் மருத்துவ சிகிச்சைக்காக, கடந்த மே மாதம் 12ஆம் திகதி அமெரிக்காவுக்குச் சென்றிருந்திருந்த நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

இதேவேளை, பஸில்ராஜபக்ஷ நாட்டில்இருந்திருந்தால்எரிபொருள் விலையேற்றம் ஏற்பட்டு இருக்காது எனவும், நாட்டின் பொருளாதாரத்தில் தளம்பல் காணப்பட்டு இருக்காது எனவும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நேற்று 1,941 பேருக்கு கொரோனா வைரஸ்



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,941 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பல வாரங்களின் பின்னர் நாளாந்தத் ☞2

## கரவெட்டியில் 20 பேருக்கு கொரோனா; கிராமத்தை உடன் முடக்க நடவடிக்கை

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஒரு கிராம சேவகர் பிரிவை முடக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜே/350 கிராம சேவகர் பிரிவில் நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 20 பேர் வரையில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் ☞2

## இலங்கையில் மேலும் 45 பேர் கொரோனா தொற்றால் சாவு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 45 உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 27 ஆண்க ளும், 18 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 814 ஆக அதிகரித்துள்ளது.

## கோட்டாவின் விசேட உரை இன்று இரவு 8.30 மணிக்கு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று இரவு 8.30 மணிக்கு, நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

கொரோனா நெருக்கடி நிலைமை, ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இப்போதைய நாடாளுமன்ற பிரவேசம் என்ற காதையின் பின்னணியில் திரைக்கதை, வசனம், டைரக்ஷன் எல்லாமே மஹிந்த ராஜபக்ஷவே என்கின்றன தென்னிலங்கையில் விடயமறிந்த ஊடகத் தரப்புகள்.

கோட்டாபய ராஜபக்ஷவின் தற்போதைய ஆட்சி முறைமை தொடர்பில், அவரை ஆட்சிக் கட்டுக்குக் கொண்டு வந்த அவரது தமையனார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெளியில் கூற முடியாத கருத்துக்கள் எவை, எவை மனத்துக்குள் இருந்திருக்குமோ – அப்படி நாம் எவற்றை ஊகிக்கலாமோ – அவை எல்லாம் ரணிலின் முதல் நாடாளுமன்றப் பேச்சில் அப்படியே கனகச்சிதமாக வெளிப்பட்டமையை நாம் மறக்கக் கூடாது – ஆட்சிச் செல்வாக்குக்குள் இராணுவத்தின் தலையீடு கட்டுக்கடங்காமல் அதிகரித்திருப்பது வரை.

இன்னொரு விடயத்தையும் தெற்கு ஊடக வட்டாரங்கள் உன்னிப்பாகக் கவனித்துக் குறித்துள்ளன. அது குறித்து நானும் இப்பத்தியில் அவ்வப்போது சுட்டி வருகிறேன். வாசகர்களுக்கு நினைவு இருக்கும்.

கடந்த ஆறு வருடங்களாக – மஹிந்த ராஜபக்ஷ அரசியல் செல்வாக்கில் பெரும் சரிவைக் கண்டதிலிருந்து ராஜபக்ஷக்கள் இப்போது மீளெழுச்சி பெற்றமை வரை – பின்புலத்தில் கொழும்பு நாரஹேன்பிட்டிய அபேராம விஹாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவ ஆனந்த தேரரின் ஆதரவும் செயற்பாடுகளும்தான் அது.

இப்போதும் கூட மஹிந்த ராஜபக்ஷவையும் ரணில் விக்கிரமசிங்கவையும் ஒரு லைனுக்குக் கொண்டு வந்தமையில் ஆனந்த முருத்தெட்டுவே தேரரின் வகிபாகம் மிகவும் முக்கியமானது என்கின்றார்கள். அது வெளிப்படையாகவும் தெரிகின்றது.

இதுவரைகாலமும், தமதுஎந்த அரசியல் நடவடிக்கையை ஒட்டியும் ஆசி பெறுவதாயின் களனி ரஜமகா விஹாரைக்குச் செல்லும் ரணில் விக்கிரமசிங்க, இம்முறை நாடாளுமன்றத்தில் தமது முதலாவது உரையை முடித்துக் கொண்டு ஆசி பெற வழமைக்கு மாறாக நாரஹேன்பிட்டிய அபேராம விகாரைக்குத்தான் சென்றார். ஆனந்த முருத்தெட்டுவே தேரரைத் தரிசித்தார்.

தேரரும் தமது பங்குக்கு மஹிந்த – ரணில் இணைந்து செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியமை மட்டுமல்லாமல், அதற்கு அப்பால் சென்று, ரணில் விக்கிரமசிங்கவின் மூளையையும், மஹிந்த ராஜபக்ஷவின் உடலையும் ஒன்றாக இணைத்தால் நாட்டுக்குப் பாரிய சேவை செய்ய முடியும் என்று தமது உள்ளக் கிடக்கையை அவிழ்த்து விட்டார்.

இந்த விடயங்கள் கொழும்பில் அரங்கேறும் சமயத்தில் தென்னிலங்கையின் முக்கிய ஊடகப் புள்ளி ஒருவர் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

*“ரணிலுக்கும் ஆனந்த முருத்தெட்டுவே தேரருக்கும் பெரிய ஊடாட்டம் – தொடர்பாடல் – கிடையாது. திடீரென இந்த இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் யார்?”* – என்று என்னைக் கேட்டார் அவர்.

*“தென்னிலங்கையில் நீங்கள்தான் கொடிகட்டிப் பறக்கும் ஊடகவியலாளர், நீங்கள் அல்லவா எங்களுக்குச் சொல்ல வேண்டும்?”* – என்று பதில் கொக்கி போட்டேன் நான்.

*“அதற்காகத்தான் உங்களிடம் கேட்பதற்கு இந்த அழைப்பை எடுத்தேன். தமிழில் உங்கள் பத்தியை நான் வாசிக்க முடிவதில்லை. ஆனால் கொழும்பில் ஒரு தமிழ் நண்பர் அதனைத் தவறாது வாசித்து, அவ்வப்போது எனக்குத் தகவல் சொல்வார். இந்த ஆனந்த முருத்தெட்டுவ தேரரை, தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. நேரில் சென்று சந்தித்தார் என உங்கள் பத்தியில் தகவல் வெளியிட்டிருந்தீரா?”* – என்று கேட்டார் அவர்.

*“ஆமாம், சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் எழுதியிருந்தேன். அபேராம விஹாரையின் விகாராதிபதியின் அழைப்பை ஏற்று சுமந்திரன் சென்றிருந்தார் என்றும், வாசல் வரை வந்து வரவேற்று சுமந்திரனுக்கு உயர்வான வரவேற்பை விகாராதிபதி கொடுத்தார் என்றும் எழுதியதாக எனக்கு ஞாபகம்”* – என்றேன் நான்.

*“அதுதான் விடயம். சுமந்திரன் மூலம் தான் ரணிலை வழிக்குக் கொண்டு வந்திருப்பார் ஆனந்த தேரர் என்று பேசுகின்றார்கள். நீங்கள் தான் ‘செக்’ பண்ணிச் சொல்ல முடியும். சொல்வீர்களா?”* – என்றார் அந்த ஊடக நண்பர்.

*“அந்தச் சந்திப்பு சமயத்திலேயே அது குறித்து சில விவரங்களை நான் திரட்டியிருந்தேன். இரண்டு விடயங்களுக்காக சுமந்திரன் தேரரைச் சந்தித்தார். ஒன்று – கொழும்பு துறைமுக நகர ஆணைக் குழுச் சட்டமூலத்துக்கு எதிராக ஆனந்த தேரர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் தேரருக்கான சட்டத்தரணியாக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனே நேரில் பிரசன்னமாகி வாதிட்ட சமயம் அது. தனக்காக முன்னிலையாகும் சுமந்திரனை நேரில் தமது விஹாரைக்கு அழைத்து கௌரவிக்க தேரர் விரும்பினார். அடுத்தது – தேரருக்கு நெருக்கமான ஒருவர் ஓர் ஊடக நிறுவனத்தைக் கைமாற்றம் செய்கின்றார். அது தொடர்பான சட்ட ரீதியான கைமாற்றங்களை சுமந்திரனின் கீழ் எப்பவோ ஜூனியராகப் பணியாற்றிய சிங்கள சட்டத்தரணி ஒருவர் கையாளுகின்றார். அது நேர்சீராக நடக்கின்றதா என்பதை ஜனாதிபதி சட்டத்தரணி என்ற வகையில் சுமந்திரன் மேற்பார்வை செய்வதை தேரர் தரப்பு விரும்பியது எனத் தெரியவந்தது. அதற்காகவும் சுமந்திரனைச் சந்திக்க தேரர் அழைத்தார் எனக் கேள்விப்பட்டேன். எனினும் இந்த விடயங்களை சுமந்திரன் எனக்குச் சொல்லவில்லை. வேறு தரப்புகள் மூலம் நான் பெற்றுக் கொண்டேன். ஆனாலும் சந்திப்பு நடந்த பின்னர், அப்படிச் சந்திப்பு ஒன்று நடந்ததா என்று சுமந்திரனிடம் கேட்டேன். அவர் ஆம் என்று சில தகவல்களைச் சொன்னார். அவ்வளவுதான்”* – என்றேன்.

*“என்றாலும் நீங்கள் விரும்பினால் உங்கள் சந்தேகத்தை நேரடியாகவே சுமந்திரனிடம் கேட்டு விடலாம்.”* – என்றும் கூறினேன்.

*“ப்ளீஸ் கேட்டுத் தகவல் தாருங்கள்”* – என்றார் அவர்.

அவர் தொலைபேசி வைத்ததுமே நான் சுமந்திரனுக்கு நேற்று அழைப்பை எடுத்தேன்.

*“இப்போது ரணில் – மஹிந்த இணைப்புக்கு முன்னணியில் நிற்கும் ஆனந்த தேரருக்கும், ரணிலுக்கும் இடையில் சமரச இணைப்பை ஏற்படுத்தியவர்கள் நீங்கள் தான் என்று தெற்கு ஊடகவிலாளர்கள் சந்தேகப்படுகின்றார்கள். அந்த சந்தேகத்தில் உண்மை இருக்கின்றதா?”* – என்று நேரடியாகவே கேட்டேன்.

அவர் அடியோடு மறுத்தார்.

*“இல்லை. தேரரை நான் சந்தித்து இரண்டொரு நாள்களிலேயே நீங்கள் கேட்டு நான் அதுபற்றிக் கூறியிருக்கிறேன். சட்டத்தரணி என்ற முறையிலேயே நான் தேரரைச் சந்திக்க வேண்டியிருந்தது. அது பற்றியே பேசினோம். இடையில் அரசியல் நிலைவரங்கள் குறித்துக் கருத்துப் பரிமாறினோம். அவ்வளவே. ரணிலுக்கும் தேரருக்கும் இணைப்பு ஏற்படுத்த என் பங்களிப்புத் தேவைப்படாது. அதற்கும் எனக்கும் எந்தத் தொடர்புமில்லை.”* – என்றார் சுமந்திரன்.

அது சரி என்றுதான் நானும் நினைக்கிறேன். என் கருத்துடன் சேர்த்து சுமந்திரனின் பதிலை என் தென்னிலங்கை ஊடக நண்பருக்கு நேற்றிரவு அழைப்பு எடுத்துத் தெரிவித்தும் விட்டேன்.

– மின்னல் –

## நேற்று 1, 941...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்று இரண்டாயிரத்தை விடவும் குறைவாகப் பதிவாகியுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து இலட்சத்து 48 ஆயிரத்து 50 ஆக எகிறியுள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 12 ஆயிரத்து 825 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 411 ஆக அதிகரித்துள்ளது.

---

## துமிந்தவின் விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் விடுதலை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியிலேயே, இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 16 பேரின் விடுதலையை அமெரிக்கத் தூதுவர் வரவேற்றுள்ளார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான சம அணுகல் என்பன ஐ.நா. நிலைபேறான இலக்குகளின் அடிப்படையாகும் என்று அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் –

இலங்கையில் பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு 93 சிறைக் கைதிகள் இன்று (நேற்று) விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விடுதலைசெய்யப்பட்டவர்களில், நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 16 பேர் உள்ளடங்குகின்றனர்.

விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் 15 பேர் அநுராதபுரம் சிறையில் இருந்தும், ஒருவர் யாழ்ப்பாணம் சிறையில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, விடுதலை செய்யப்பட்ட மற்றைய 77 பேரும் சிறிய குற்றங்கள் தொடர்பில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்தவர்கள் – என்றார்.

---

## ஐ.நா. மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தன்னிச்சையான செயற்பாட்டுக்கு மற்றொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இவ்வாறான செயற்பாடு சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படுத்துகிறது.

அத்துடன், மற்றும் பொறுப்புக்கூறலைக் குறைமதிப்புக்கு உட்படுத்துகின்றது என ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ ருவிட்டரில் பதிவிடப்பட்டுள்ளது.

---

## கோட்டாவின் விசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களுக்கான நிவாரணம், பொருளாதார மீட்பு நடவடிக்கை உட்பட முக்கிய சில அறிவிப்புகளை அவர் விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள அனைத்து தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் ஜனாதிபதியின் விசேட உரை ஒளி, ஒலிபரப்பாகும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## முற்றாக முடக்கப்பட்டன மேலும் ஏழு கிராமங்கள்

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் 7 கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் குருநகர் மேற்கு, ரெக்லமேசன் மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், மட்டக் களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் மஞ்சந்தொடுவாய் வடக்கு, மஞ்சந்தொடுவாய் தெற்கு ஜின் னா வீதி கிராம சேவகர் பிரிவுகளும், மண்முனை பொலிஸ் பிரிவில் மாமாங்கம் கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பொலிஸ் பிரிவில் இழுப்புகெதர கிராம சேவகர் பிரிவில் வில்கொட கிராமும், கனுக்கெட்டிய கிராம சேவகர் பிரிவில் கனுக்கெட்டிய கிராமமும் மறு அறிவித்தல் வரை இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டார்.

---

## கரவெட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணப்பட்டுள்ளனர். இந்நிலையில், குறித்த கிராம சேவகர் பிரிவை சுகாதாரப் பிரிவினால் முடக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கபப்ட்டுள்ளன.

எனினும், மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியின் ஒப்புதல் இதுவரையில் கிடைக்கவில்லை எனவும், அனுமதி கிடைத்தவுடன் குறித்த கிராம சேவகர் பிரிவு முடக்கப்படும் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

---

## துமிந்த சில்வாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசு வேண்டுமென்றே துமிந்தவைத் தண்டித்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குரல் பதிவுகள் மூலம் இந்த விடயம் அனைவருக்கும் வெளிச்சமாகியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலமொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனவும், துமிந்தவுக்கு அநீதி இழைக்கப்பட்டது எனப் பல்வேறு தரப்பினரும் கருத்து வெளியிட்டிருந்தனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துமிந்த சில்வா மற்றும் பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமை ஆரோக்கியமான ஒரு நகர்வு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் சந்தேகத்தின் பேரில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்கு எதிராக இதுவரையில் குற்றப்பத்திரிகை கூட தாக்கல் செய்யப்படவில்லை எனவும் அமைச்சர் நாமல் மேலும் கூறியுள்ளார்.

---

## மரண தண்டனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஜித் றோஹண தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவத்தில், கொழும்பு மேல் நீதிமன்றம் 2016 ஆம் ஆண்டு துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனைத் தீர்ப்பளித்தது.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை விடுவிக்கப் பரிந்துரைத்திருந்தது.

நேற்று பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு 93 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா லண்டன் சென்றார்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க லண்டன் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வாரத்துக்கு முன்பு லண்டன் புறப்பட்ட முன்னாள் ஜனாதிபதி தனது பிள்ளைகள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் சில வாரங்கள் அங்கேயே செலவிடத் திட்டமிட்டுள்ளார் என அறியப்படுகிறது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ஆழ்ந்த ஏமாற்றத்தில் உள்ளார் எனவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவிர சிகிச்சைப் பிரிவில் 135 கொவிட் நோயாளர்

நாட்டில் 135 கொவிட் நோயாளர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை கொவிட் நிலைமை தொடர்பாகக் கருத்து தெரிவித்த போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி 2 ஆயிரத்து 769 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொவிட் முதலாவது மற்றும் இரண்டாவது அலைகளின் போது நாட்டில் 609 பேர் உயிரிழந்திருந்த நிலையில் மூன்றாவது அலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது.

இதற்கமைய, புது வருடத்தின் பின்னர் கொவிட் மூன்றாவது அலையில் இதுவரை 2 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனா மரணங்கள் பதிவாகி உள்ளன.

இந்த பின்னணியில், கடந்த 13 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கொவிட் இறப்புகளின் சராசரி எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 50 ஆக பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா வைத்திருந்த ஒருவர் கைதாகினார்

தெமட்டகொட பகுதியில் வைத்து கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

24 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபரிடம் இருந்த 4 கிலோ கஞ்சா மற்றும் 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## உயர் தரப் பரீட்சையின் மீள் மதிப்பீடு விண்ணப்பங்கள் ஒன்லைன் ஊடாக

2020 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் மீள் மதிப்பீட்டு விண்ணப்பங்களை ஒன்லைன் முறையின் ஊடாக மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) முதல் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வரையில் இவ்வாறு விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பெண் கைது

ஒரு கிலோகிராம் ஹெரோயினுடன் மோதர பகுதியில் வைத்து பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணிடம் இருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

25 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 6 | விஞ்ஞானம் | அலகு 04

**24ஆம் திகதி வெளியான வினாக்களுக்குரிய**

### விடைகள்

**05.**

**I)** நிலக்கரி
பெற்றோலிய எண்ணெய்
பெற்றோலிய வாயு

**II)** **b)** டீசல்
**c)** உயிர்வாயு (L.P.gas)
**d)** டீசல்
**e)** டீசல்
**f)** மண்ணெண்ணெய்

**06.**

**i)** பொருட்களை உலர்த்தல்
மின் உற்பத்தி
**ii)** அம்பாந்தோட்டை
புத்தளம்

**07.**

**i)** தானியம் அரைத்தல்
மர ஆலைகளை இயக்குதல்

**ii)** கொத்மலை
ரன்தெனிகல
விக்டோரியா

**iii)** 2004

**08.**

**i)** சூரிய, சந்திர ஈர்ப்பின் காரணமாக சமுத்திர நீர்மட்டத்தில் மாற்றம் ஏற்படும். இது வற்றுப்பெருக்கு எனப்படும்.
**ii)** வற்று:- கடல் மட்டம் குறைவடையும்.
நீர் தேக்கங்களிலிருந்து கடலை நோக்கி நீரைப் பாயச் செய்யலாம்.

பெருக்கு:- கடல் மட்டம் உயர்வடையும்
தரையிலுள்ள நீர்த்தேக்கங்களுக்கு கடல் நீரைப் பாயச் செய்யலாம்.
**iii)** தொழில்நுட்ப நுணுக்கங்களை பயன்படுத்தி அணுவிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் சக்தி கருச்சக்தியாகும்.

**09.**

**i)** சனத்தொகை அதிகரிப்பு
**ii)** சுவட்டு எரிபொருட்கள்
**iii)** சக்தி முதல்களை சிக்கனமாக பயன்படுத்தலாம்.
புதிய சக்தி முதல்களின் பயன்பாடு

**செல்வி சுஜாதா விநாயகமூர்த்தி**
**கட்டுறுப்பயில்வு ஆசிரியை (கிளி/ பளை மத்திய கல்லூரி)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

**வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு.பிரான்சிஸ் தோமஸ் எடிசன்**
**விரிவுரையாளர்.**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## பொது மன்னிப்பு அரசியல்

நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் வசனம் ஒன்று உண்டு. *'சைக்கிள் கேப்பில கடா வெட்டிட்டாண்டா?'* – என்பது அது.

அப்படி ஒரு நடவடிக்கையைக் கனகச்சிதமாக நிறைவேற்றியிருக்கின்றார் நாட்டின் அதி உத்தமர்.

கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கப் போகின்றார் என்ற விவகாரம் ஆரவாரமாகப் பேசப்பட வைக்கப்பட்டது.

இளம் ராஜபக்ஷவான அமைச்சர் நாமல் நாடாளுமன்றத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் அவல நிலைமை பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்தியபோது எல்லோரும் அதிர்ந்துதான் போனார்கள்.

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் இத்தகைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பை பகிரங்கமாக அப்போதைய ஜனாதிபதியால் செய்ய முடியாமல் இருந்தது.

சட்டமா அதிபரின் மூலம், நீதிமன்றத்தில் அரசுத் தரப்பின் ஆட்சேபத்தை விலக்க வைத்து, மெல்ல மெல்ல ஒவ்வொரு வழக்காகக் கையாண்டு, சுமார் நூற்றியிருபது தமிழ் அரசியல் கைதிகள் அக்கால கட்டத்தில் நீதிமன்றம் மூலம் விடுவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது தாராளத்தையும், பெருந்தன்மையையும் வெளிப்படுத்திக் காட்டும் நிகழ்வாக, தமது உயிருக்கு உலை வைக்கத் திட்டமிட்டார் என்ற பெயரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவரை மட்டுமே மன்னிப்பளித்து விடுவித்து ஆலாபரணம் பண்ணினார்.

வேறு சர்ச்சைக்குரிய பல கைதிகளுக்கு பொது மன்னிப்பு மூலம் விடுதலை அளிக்க முடிந்த அவரால், தடுப்பில் தொடர்ந்து இப்போது வரை இருக்கும் சுமார் நூறு கைதிகளில் எவருக்கும் அப்போது மன்னிப்பு வழங்க முடியவில்லை. அதற்குக் காரணம் அப்போதிருந்த எதிரணிதான்.

நாட்டை நாசமாக்கிய – மிகப் பயங்கரமான – தீவிரவாதிகளை வெளியே விட்டு, நாட்டின் பாதுகாப்பைப் பேராபத்துக்குள் மூழ்கடிக்க முயலுகின்றார் என்ற அரசியல் அச்சுறுத்தல் கருதி மைத்திரிபால சிறிசேன இவ்விடயத்தில் அமுக்கி வாசிக்க வேண்டியிருந்தது.

தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் மனைவி உயிரிழந்தமையால் அவர்களின் குழந்தைகள் இரண்டு அநாதைகளான போது, அக்குழந்தைகளுக்காகத் தந்தையாரை விடுவிக்கும்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சர்வதேசத் தளத்தில் இருந்தும் கூட கடும் அழுத்தம் வந்தது. அந்தக் குழந்தைகளைத் தமது ஜனாதிபதி இல்லத்துக்கு அழைத்துப் பேசி, ஆறுதல் வார்த்தைகள் கூறி, அப்பாவை விரைவில் விடுவித்துத் தருவேன் என்று கூறிய மைத்திரிபால சிறிசேனவினால் தனது பதவிக் காலத்தில் அந்தக் கைதிக்குக் கூட பொதுமன்னிப்பு வழங்கி, அவரை விடுவிக்க முடியவில்லை. எதிரணி அழுத்தம் – அரசியல் நெருக்குவாரம் – அவருக்கு அவ்வளவு தூரம் இருந்தது.

அந்த நெருக்குவாரத்தைத் தந்த தரப்பே தமிழ் அரசியல் கைதிகளுக்கு இழைக்கப்படும் அநீதி, இன்னல்களை இப்போது விலாவாரியாக நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்த போது, நோக்கர்கள் அதிர்ந்துதான் போனார்கள். ஏன் இந்த திடீர் ஞானம்? 'ஸேம் சைட் கோல்' எதற்காக? – என்றெல்லாம் பலரும் தலையைப் பிய்த்துக் கொண்டு கேள்வி எழுப்பத் தவறவில்லை.

எது, எப்படியென்றாலும் இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி தமிழ் அரசியல் கைதிகளுடன் இதுவரை காலமும் நெருங்கி ஊடாடி வந்தவர் என்ற முறையில் அக்கைதிகளுக்காக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குரல் எழுப்பியமை வரவேற்கப்பட்டது என்பது மறுக்க முடியாதது.

ஆனாலும், தமிழ் அரசியல் கைதிகளை மன்னிப்புத் திட்டத்தில் விடுவிக்கும் விவகாரம் பெரியளவில் பேசப்பட்டு, பெரும் பிம்பமாக அது காட்டப்பட்ட சமயத்தில், சைக்கிள் Gap இல் கடா வெட்டிய மாதிரி, அந்த ஆரவாரத்துக்கு மத்தியில், சத்தம் சந்தடியின்றி மரண தண்டனைக் கைதியான துமிந்த சில்வாவும் வெளியேவர வழி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு விட்டது.

தன்னுடைய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஷமன் பிரேமச்சந்திரா என்ற மூத்த அரசியல் தலைவரைச் சுட்டுக் கொன்ற வழக்கில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் – அட் பார்' நீதிமன்றத்தினால் – மூன்று நீதிபதிகளின் ஏகமனதான முடிவின் அடிப்படையில் – குற்றவாளியாகக் காணப்பட்டு, அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அந்த வழக்கின் மேன்முறையீட்டை விசாரணை செய்த ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் அந்த மரண தண்டனைத் தீர்ப்பை ஏகமனதாக உறுதி செய்தது.

துமிந்த சில்வா அரசியலில் தங்களின் சகா என்பதற்காக இந்தப் பொதுமன்னிப்பை ராஜபக்ஷக்கள் வழங்கியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. அதுவும் ஒரு கொலை வழக்கின் குற்றவாளிக்கு மரண தண்டனைத் தீர்ப்பிலிருந்து விடுவிப்புக் கிடைத்திருப்பது தென்னிலங்கை அரசியலில் பெரும் பரபரப்பை – அதிர்வுகளை – ஏற்படுத்தியிருக்கின்றது. இதன் பக்க விளைவுகளை வரும் நாள்களில் காணக்கூடியதாக இருக்கும்.

## சுகாதார வழிகாட்டலை மீறினால் அபராதம் 50 ஆயிரம் ரூபாவாக உயர்த்த ஆராய்வு

### அமைச்சர் பவித்ரா எச்சரிக்கை



கொவிட் – 19 தொற்றுநோயின் மூன்றாவது அலை பரவுவதைக் கட்டுப்படுத்த சுகாதார வழிகாட்டுதல்களை மீறுபவர்களுக்கான அபராதத் தொகையை 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்படுகின்றது.

தற்போது ஐந்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும்நிலையில், அந்த தொகையை 50 ஆயிரம் ரூபாவாக உயர்த்துவது தொடர்பாக அரசாங்கம் பரிசீலித்து வருவதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் விதிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களைப் பொதுமக்கள் தொடர்ந்து மீறி வருகின்றமையால், இந்த நடவடிக்கை தொடர்பில் சுகாதார அமைச்சு தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது அமுலில் உள்ள சுகாதார விதிமுறைகளை முழுமையாகக் கடைப்பிடிக்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளதுடன், இதன் மூலம் வைரஸின் மூன்றாவது அலை பரவுவதைத் திறம்பட கட்டுப்படுத்த முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நோய்த் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த தற்போது நடைமுறையில் உள்ள சுகாதார விதிமுறைகள் காவல் துறையுடன் இணைந்து தனது அமைச்சால் கண்டிப்பாக செயல்படுத்தப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.


## இலங்கையில் ஹெலிக்கொப்டர் கொள்வனவு செய்த அந்த பிரபல அரிசி வர்த்தகர் யார்?

அண்மையில் ஹெலிக்கொப்டர் கொள்வனவு செய்த பொலன்னறுவை அரிசி வர்த்தகர் தான் என ரத்ன அரிசி வர்த்தகர் மித்ரபால லங்கேஷ்வர தெரிவித்துள்ளார்.

இணையத்தள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். விரைவில் உள்ளூர் விமான சேவை ஒன்றை ஆரம்பிக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனிப்பட்ட விமானம் ஒன்றும் ஹெலிக்கொப்டர்கள் சிலவற்றையும் கொள்வனவு செய்வதற்குத் தான் தயாராக இருக்கிறார் என அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணத்தில் இந்த ஹெலிக்கொப்டர் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சுமத்



தப்படும் குற்றச்சாட்டை அவர் நிராகரித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் அரிசியில் இரசாயனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். எப்படியிருப்பினும் எதிர்வரும் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பண்டாரவளை, முல்லேரியாவில் படு கொடூரம் தலையில்லாத குழந்தைகளின் சடலங்கள் மீட்பு!

நாட்டில் இருவேறு இடங்களில் இருந்து தலையில்லாத இரண்டு குழந்தைகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டாரவளை மற்றும் முல்லேரியா ஆகிய பகுதிகளில் இருந்து இந்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாகக் கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பண்டரவளை, எல்ல – கரண்டகொல்ல பகுதியில் இருந்து ஒரு சடலம் கண்டெடுக்கப்பட்டது. அப்பகுதியில் உள்ள ஒரு வீட்டின் அருகே சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மற்ற குழந்தையின் உடல் முல்லேரியாவில் உள்ள கெலனி நதி மாவத்தை பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றிலிருந்து இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குழந்தைகளின் உடல் பொலித்தீன் பையில் போடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் குழந்தைகள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## சீனியின் விலை எகிறும் சாத்தியம்!

சீனியின் விலை உயர்த்தப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உடன் அமுலுக்கு வரும் வகையில் சீனி இறக்குமதியை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளதாகவும் இதனால் சீனியின் விலை உயரக் கூடிய சாத்தியம் உருவாகியுள்ளது எனவும் தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனியை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்கள் கடந்த 22 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்படுகின்றன என ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளர் தமயந்தி எஸ்.கரு



ணாரட்ன அறிவித்துள்ளார்.

இந்த தீர்மானம் காரணமாக சுமார் நாற்பது அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்ட சீனி இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்படவிருந்த இரண்டு லட்சம் மெற்றிக் தொன் எடையுடைய சீனி இறக்குமதி இடைநிறுத்தப்படும் என ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுப் பணியகத்தின் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவி வரும் டொலருக்கான கையிருப்பு பிரச்சினையால் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

சீனி இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளை மற்றும் சிவப்பு சீனியின் மொத்த விற்பனை விலைகளை சில மொத்த வியாபாரிகள் உயர்த்தியுள்ளனர்.

இனி வரும் நாள்களில் சீனியின் சில்லறை விற்பனை விலை உயர்த்தப்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என அந்த தெற்கு ஊடகம் தெரிவித்துள்ளது.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 31ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**301. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பை கைப்பற்றிய அணி எது?**
**302. உலகத்தில் மிக வறிய நாடு எது?**
**303. $36Kmh^{-1}$ இனை $ms^{-1}$ இல் எழுதுக?**
**304. இலங்கை வானொலியை முதன் முதலில் ஒலிபரப்பு செய்வதற்கான கருவி எங்கிருந்து பெறப்பட்டது?**
**305. இலங்கை வானொலியை ஆரம்பிப்பதற்கான பொறியியலாளர் குழுவில் இருந்த தமிழர் யார்?**
**306. சூரியக் குடும்பத்தைக் கண்டுபிடித்தவர் யார்?**
**307. தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் இறுதியாக கொரோனாத் தொற்று கண்டறியப்பட்ட சிங்கத்தின் பெயர் என்ன?**
**308. இலங்கையின் தற்போதைய நிதி இராஜாங்க அமைச்சர் யார்?**
**309. ALU இன் விரிவாக்கம் யாது?**
**310. இலங்கையில் கொவிட்டின் மூன்றாவது அலைக்கு வழங்கப்பட்டிருக்கும் பெயர் என்ன?**

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ...........................

## 29ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**281. கபில.சி.பெரைரோ**
**282. 29**
**283. மே 31**
**284. நியால்**
**285. புஸ்பிகா டி சில்வா**
**286. ஹென்றி பெல்**
**287. 1914 - 1918**
**288. மாணிக்க விழா**
**289. ஏகபோகம்**
**290. ஆஸ்லி பாரட்டி**

## 23ஆம் திகதி வெளியான 29ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. ஜெ. வினோஜன் - குடத்தனை
2. ஆ. துஷான் - நீர்வேலி
3. எஸ். சதுர்ஜினி - அல்வாய் - (09 சரி)
4. கே. அனுஷன் - ஏழாலை - (09 சரி)
5. எம்.வர்ணபாலன் - யாழ்ப்பாணம் - (09 சரி)
6. எஸ். துவாரகி - யாழ்ப்பாணம் - (08 சரி)
7. எஸ். ஸ்ரீஇராமச்சந்திரன் - வத்திராயன் (08 சரி)
8. ஐ.கார்த்திகன் - யாழ்ப்பாணம் - (08 சரி)
9. பி. சயந்தன் - அரியாலை (09 சரி)

## ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைக்கு மாற்று வழிகள் பற்றி ஆராய்வு

### அரசாங்கம் தெரிவிப்பு



ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெறுவதற்காக நாட்டில் அரசியல்உறுதியற்ற தன்மையை உருவாக்கத் தயாராக இல்லை என அரசாங்கம் கூறுகிறது.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைத் தக்கவைக்க இராஜதந்திர மட்டத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

மேலும் அதே நேரத்தில் இலங்கை குறித்த சலுகையை இழந்தால் மாற்று வழிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த அஜித் நிவாட் கப்ரால், கடந்த அரசாங்கம் சலுகையைப் பெறுவதற்காக தேசிய கொள்கையையும் நாட்டின் ஸ்திரத்தன்மையையும் சமரசம் செய்ததாகக் குற்றம் சாட்டினார்.

இருப்பினும் தற்போதைய அரசாங்கம் இறக்குமதியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் ஒரு நிலையான சூழலை உருவாக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

## இரண்டு பெண் பொலிஸார் உட்பட மூவருக்கு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் தொற்று

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் 76 பொலிஸாருக்கு அன்டிஜன் பரிசோதனை கடந்தபுதன்கிழமை மேற்கொண்டதில் இரு பெண் பொலிஸார் உள்ளடங்கலாக மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸார் விடுமுறையில் தமது வீட்டுக்குச் சென்ற நிலையில் அவர்களுக்கு அங்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டதில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றிய பொலிஸ் நிலையத்திலுள்ள 76 பேருக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போதே குறித்த மூவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் மேலுமொரு சிங்கத்திற்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 25

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் மேலுமொரு சிங்கத்துக்குக்கொரோனாவைரஸ் தொற்றுஉள்ளமைஉறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஷீனா என்ற 12 வயது சிங்கம் ஒன்றுக்கே இவ்வாறு வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் தற்கொலைக்கு முயன்றவர் மீனவர்களால் காப்பாற்றப்பட்டார்!

மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் மேல் இருந்து தற்கொலை செய்ய வாவியில் குதித்த இளைஞர் ஒருவரை வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் காப்பாற்றி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ள சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுதாவளை 4 ஆம் ஸ்ரீ முத்துமாரியமன் கோவில் வீதியைச்சேர்ந்த 32 வயதுடைய இளைஞனே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளார்.

குறித்த பாலத்தின் அருகில் இளைஞர் கொண்டுவந்த பை மற்றும் செருப்பு என்பவற்றை கழற்றி வைத்துவிட்டு பாலத்தின் மேல் இருந்து சம்பவதினமான புதன் வாவியில் வீழ்ந்து தற்கொலை செய்து கொள்வதற்காக வாவியில் குதித்துள்ளார்.

இதன்போது, குறித்த பகுதியில் தோணியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் உடனடியாக வாவியில் குதித்த இளைஞரை காப்பாறி கரைசேர்ததுடன், உடனடியாக மட்டக்களப்புபோதனாவைத்தியசாலை தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்த்தனர்.



இதுதொடர்பான விசாணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**- செல்லத்துரை ரவீந்திரன் -**

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அங்கம் 46**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**142. போர் வெற்றிகளிலேயே தமிழீழத்தின் அடிப் படைகள் நிறுவப்பட வேண்டும் என்றவர்கள் அப்படியான அடிப்படைகளை விடுதலைப்புலிகள் நிறுவினார்களா?**

எந்த ஒரு கட்டடத்துக்கும் - வீடு, கோவில் எதுவா னாலும் - அத்திபாரம் அந்த கட்டடத்தை நிலையாக வைத்திருக்க கூடியதாக இருக்க வேண்டும். அத்தி பாரம் உறுதியானதோ என்னவோ அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினார்கள். யாழ்ப் பாண மாவட்டத்திலிருந்து வன்னி, கிளி நொச்சி பிரதேசங்களுக்குக் குடிபெயர்ந்த மக்களின் பராமரிப்புக்காக அந்த விடயத்தை அவர்களின் சிவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தார்கள்.

பிரபாகரன் தமிழ் ஈழத்தின் தேசிய தலை வரானார். சிவில் நிர்வாகத்தின் பொறுப்பை தமிழ்செல்வன், நிதித்துறையை தமிழேந்தி, நீதித்துறைக்கு பரா, காவல் துறைக்கு நடே சன், அபிவிருத்தி துறைக்கு ரவி எனப் பல் வேறு துறைகளுக்கும் பொறுப்பாளர்கள் பதவி ஏற் றார்கள். அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கும் உள் நுழைவதற்கும் பாஸ் முறைகள் அமுல்படுத்தப்பட்டன. அவர்களின் துறை கள் சீராக இயங்கின.

அந்த செய்திகள் எல்லாம் புலம் பெயர் சமூகத் திற்கு வர, அவர்கள் தமிழீழத்தின் அமைப்புகளை உருவாக்கி விட்டோம், அதனைப் பலப்படுத்துவதுதான் பாக்கி, என்றும் வன்னி கேட்பதை செய்வதே தமது கடமை என்றும் கருதி கேள்விகள் கேட்கவில்லை. நடந்தவற்றில் நம்பிக்கையும் நடப்பதில் பெருமையும் கொண்டாடினார்கள். அதனால் புத்திஜீவிகளும் புலம் பெயர்ந்த மக்களும் அந்தப் பாதையிலேயே விடி வுண்டு என்றும், சர்வதேசம் அதனை அங்கீகரிக்க வேண்டும் என்றும் பரிவுரைகள் சொன்னார்களே ஒழிய, அதன் வழிமுறைகளுக்கு - சர்வதேசத்தின் புவியில் இயல்புகளுக்கு - சேர்ந்து இயங்கும் நெளிவு சுழிவுகளில் கவனம் செலுத்தவில்லை.

**143. எவற்றை வைத்து அதனைச் சொல்கிறீர்கள்?**

சர்வதேசத்தின் அணுகுமுறைகளை அனுசரித்து செயற்திட்டங்கள் இருக்க வேண்டும் என விரும்பிய சத்தியேந்திரா போன்றோர் அவர்களின் சர்வதேச பேச்சாளராகக் கிட்டுவால் பிரேரிக்கப்பட்டவர். அவர் சர்வதேசத்திற்கு இணைவாக, இசைவாக, அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு, சட்ட ஆதாரங்களுடன், தமிழ் மக்களுக்கெதிரான மனித உரிமை மீறல்களையும் அவர்களுக்குரித்தான சுயநிர்ணயத்தையும் முன்



இந்தியக் கைதியாக சிவநாயகம்

நிலைப்படுத்த, எழுதிய கட்டுரைகள், மனுக்களைத் தவிர "தமிழ் தேசம்" (Tamil Nation) என்ற சஞ்சிகை யும் நடத்தத் தொடங்கினார்.

அத்துடன் அவர் தனது வாதங்களில் தமிழ் மக்கள்



கூட்டத்தில் உரையாற்றும் சிவநாயகம்

தங்கள் சுய நிர்ணய உரிமைகளின் அடிப்படை யில் தங்களது எதிர்காலத்தை தீர்மானிக்கவேண் டும் என்று சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் வாதிட்டார். அந்த சுயநிர்ணய வாக்குகளின் முடிவு இறைமையுள்ள தமிழீழமாகத்தான் இருக்க வேண் டும், அதற்காகதான் அந்த சுயநிர்ணய உரிமை இருக்க வேண்டும், ஆனால் அது அவர்களது விருப் பம் என்று அவரால் செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகள் விடுதலையை முன்னெடுக்க வேண்டுமென்று இவர் கருதினாலும், மற்றவர்கள் முற்று முழுதாக ஒதுக்கப் படவேண்டும் என்ற கருத் தைக் கொள்ளவில்லை.

ஐரோப்பிய விடுதலை புலிகளின் அமைப்புகள், அப்படியல்ல, விடுதலைப் புலிகளின் பாதை என்ற ஒன்றை மட்டுமே வாதம் செய்ய வேணும், அதைத் தீர்மானியுங்கள் என்று சொன்னார்கள். நாட்டைப் பிரிப்பதற்கு இந்தியா உட்பட சர்வதேசத்தில் ஆதர வில்லாத நிலையில், அதற்காகத்தான் சுயநிர்ணய உரிமை கோருகிறோம், அது தரப்படவேண்டும் என்று கேட்பது புத்திசாலித்தனமல்ல, அது இன்னும் ஆதரவைக் குறைக்கும் என்பதில் அவர் திடமாக இருந்தார்.

புலிகளின் நிலைப்பாட்டுக்கு மறுதலிப்பில்லாமல், ஒத்துழைப்புத் தருபவர்களை அரவணைத்துப் பொது நிலையில் போவது, ஏற்க கூடியது என வாதிட்டார். இந்த வாதமே கிட்டு ஐரோப்பாவை விட்டு வெளியே றியபின் அவரை சர்வதேச பேச்சாளராக உயர்வதற் குக் குந்தகம் செய்தது. விடுதலைப் புலிகளின் பாதை என்ற ஒன்று மட்டுமே, அதை தீர்மானியுங்கள் எனச் சொல்லப்பட்டார்.

அடுத்து புலம் பெயர்ந்தோரின் வரப்பிரசாதமாக முன்னாள் Saturday Reviewவின் ஆசிரியரும் சென்னையிலிருந்த தமிழர் தகவல் நிலையத்தின் இயக்குநருமான சிவநாயகம் அகதியாக இந்தியாவி லிருந்து விடுதலைப் புலிகளின் அரவணைப்பில் பாரிஸ் வந்து சேர்ந்தார். அப்பொழுது தமிழர் தகவல் நிலையத்தை லண்டனில் வரதகுமார் நடத்தி கொண்டிருந்தாலும், தான் இந்தி யாவில் பெற்ற அனுபவங்களால், விடுதலைப் புலிகளின் ஆதரவிலே தங்கியிருந்தாலும் அவர்களின் கொள்கை அடிப்படையிலேயே இயங்க சிவநாயகம் விரும்பினார். அவர் களின் சஞ்சிகைகளை முக்கியமாக சர்வ தேச தமிழர் Tamil International என்பதை பொறுப்பெடுத்து விடுதலைப் புலிகளை நியாயப்படுத்தியும் பேச்சு வார்த்தைகளின் முகமூடிகளை கிழித்தும் அவரது கட்டுரைகள் பல வலம் வந்தன. லண்டன் புலர் பெயர மைப்புகளின் வேண்டுகோளில் அங்கு சென்று "Hot Spring" என்ற சஞ்சிகையை ஸ்தாபித்து, பொறுப்பேற்று நடத்தி சத்தியேந் திராவிற்கும் Tamil Nation ஐ நடத்த உறு துணையாக இருந்தார். அவர் Saturday Reviewவிற்கு வந்த நாட் தொட்டே தமிழ ருக்கான ஒரு கர்மயோகியாக வாழ்ந்தவர்.

Saturday Reviewஊடாகவும் சென் னையில் தமிழர் தகவல் நிலையத்தின் இயக்குநராகவும் சிவநாயகம் சர்வதேசத் துக்கு நன்கு அறியப்பட்டவர். தமிழர் தகவல் நிலையத்தின் கோட்பாடுகளுக்கமைய பக்கம் சாராமல் அவற்றின் கருத்துக்கள், எழுத்துக்கள், ஸ்ரீலங்காவின் அட்டூழியங்களையும் தமிழர்களது உரிமைகளையும் அவை நசுக்கப்படுவதையும் பறை சாற்றின. அந்த எழுத்துக்கள் பெருமதிப்பு வாய்ந் தவை. ஸ்ரீலங்கா புலனாய்வு Saturday Review கட்டுரைகள் பற்றி அவரை விசாரணைக்கு தேடிய தால் கடல் மார்க்கமாக இந்தியா வந்தடைந்து, அங்கு அகதியாக வாழ்ந்து, தமிழர் தகவல் நிலையத்தை பொறுப்பேற்றவர். அவர் கையில் எந்த நாட்டு பாஸ் போட்டும் இருக்கவில்லை. அவர் இருந்தமையை - தமிழர் தகவல் நிலையத்தில் இயங்கியமையை இந்திய அரசு அல்லது அவர்களின் புலனாய்வாளர் களோ அறியாமல் இல்லை. ஏன், இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டபின், தமிழ் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் சென்று புலிகள் மற்ற இயக்கங்களோடு பேசி ஆயுதங்களைத் தருவ தற்கு பேச்சுவார்த்தைகள் நடத்தியவர்கள், இதற்காக இந்திய புலனாய்வாளர்களோடு இந்திய விமானத் திலேயே அங்கு சென்றவர், அவர்களே மீளக் கொண்டு வந்து சென்னையில் விட்டவர்கள்.

ஆனால், விடுதலைப் புலிகள் இந்திய படைகளு டன் போர் தொடங்கியதும், இந்திய மண்ணில் தமிழ் மக்களுக்கு முக்கியமாக தகவல் தந்தவை, சல்லடை போடப்பட்டன. சிவநாயகம் கைது செய்யப்பட்டார் - இந்தியாவின் பாதுகாப்புக் கருதி. சித்திரவதைக்குள் ளாகி, சிறைப்பட்ட வேதனைகளில் ஒரு வைராக்கிய மும் மனமாற்றமும் வந்திருந்தது. கடைசியாக அவர் மேல் குற்றம் எதுவித பாஸ்போட்டும் இல்லாமல் இந் தியாவில் தங்கியிருந்தார் என்பது. அவற்றினால் அவர் விடுதலைப் புலிகளின் பாதையை முன்னெடுப் பது என்ற முடிவுக்கே வந்தார். அதனால் நான் முன் னர் தமிழில் கூறிய கூற்றுகளையும், தமிழர்களின் உணர்ச்சிகளையும் எதிர்பார்ப்புகளையும் காரசார மாக எழுதினார்.

(வளரும்....)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 6** | **விஞ்ஞானம்** | **அலகு 05**

## ஒளியும் பார்வையும்

**01. பகல் நேரங்களில் எம்மைச் சூழவுள்ள அநேகமான பொருட்களை பார்க்கின்றோம் எனினும் இரவு நேரங்களில் அப்பொருட்களைப் பார்க்க முடிவதில்லை. பகல்நேரங்களில் கூட கண்ணை மூடிக்கொண்டிருக்கும்போது எமக்கு எந்தப் பொருளையும் பார்க்க முடிவதில்லை.**

i) கண்ணைமூடிக் கொண்டு ஒரு பொருளை அவதானிக்க முடியுமா?

--------------------------------------------------------------------

ii) மேற்படி உமது பதிலுக்கான காரணம் யாது?

--------------------------------------------------------------------

iii) இரவு நேரத்தில் ஒரு பொருளை எம்மால் பார்க்க முடியாமைக்கான காரணம் என்ன?

--------------------------------------------------------------------


iv) பகல் வேளையில் அநேகமான பொருட்கள் எமக்கு தென்படுவதற்கான காரணம் என்ன?

--------------------------------------------------------------------

v) பொருளொன்றை பார்ப்பதற்கு அவசியமான காரணிகள் எவை?

--------------------------------------------------------------------

**02. எமக்கு ஒளியை வழங்குகின்ற பிரதான ஒளி முதல் சூரியன் தாவரங்கள் உணவுத் தொகுப்புக்கு சூரிய ஒளி இன்றியமையாதது. இரவு வேளையில் நமக்கு சூரிய ஒளி கிடைக்காததால் நாம் வெவ்வேறு முறைகளில் ஒளியைப் பெற்றுக் கொள்கின்றோம்.**




**தரப்பட்ட சொற்களைப் பயன் படுத்தி இடைவெளி நிரப்புக.**

i) ஒளியானது a) சக்தி வடிவமாகும். அது b) ------------- பாதையில் செல்கிறது. எமது பிரதான ஒளிமுதல் c) ------------- ஆகும். தாவரங்களின் உணவு உற்பத்தி செயன் முறைக்கு d) ------------- பயன்படுகிறது. ஒளியைத் தோற்றுவிக்கும் பொருட்களை e) --------------- என அழைக்கின்றோம். ஒளியை வெளிவிடும் பொருட்களை ஒளிரும் பொருட்கள் என அழைக்கின்றோம். நாமாக ஒளியை தோற்றுவிக்காத பொருட்கள் j) ----------------- எனப்படும். g) ------------- ஒரு ஒளிராப் பொருளாகும்.

| சக்தி / ஒளிமுதல்கள் / சூரியசக்தி / ஒளிராப் பொருட்கள் / நேர்கோட்டு / சூரியன் / சந்திரன் |
|---|

ii) இயற்கை ஒளிமுதல்களுக்கு 02 உதாரணம் தருக?

------------------------------- -------------------------------

iii) செயற்கை ஒளிமுதல்கள் 02 தருக?

------------------------------- -------------------------------

iv) ஒளிரும் பொருட்களுக்கு உ+ம் தருக?

------------------------------- -------------------------------

v) சந்திரன் ஒளிரும் பொருளா / ஒளிராப் பொருளா? காரணம் தருக?

------------------------------- -------------------------------

vi) பின்வரும் படங்களை நன்கு அவதானித்து அவை ஒவ்வொன்றும் ஒளிரும் பொருளா/ ஒளிராப் பொருளா என வேறுபிரித்து எழுதுக?


குடை


மெழுகுதிரி


சூரியன்


சந்திரன்


மேசை



மின்சூள்


தாயக்கட்டை


மின்குமிழ்

| ஒளிரும் பொருள் | ஒளிராப் பொருள் |
|---|---|
| உ+ம் - சூரியன் | மேசை |
| ---------------------------- | ---------------------------- |
| ---------------------------- | ---------------------------- |
| ---------------------------- | ---------------------------- |

**03. பொருட்களினூடு ஒளியானது கடத்தப்படும் விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.**



மெழுகுவர்த்தி ஒன்று ஒளிரச் செய்யப்பட்டு **a, b, c** ஆகிய மூன்று பொருட்களை மெழுகுவர்த்தி சுவாலையின் முன் பிடித்து அதனூடாக மெழுகுவர்த்தி சுவாலையை அவதானிக்கும்போது உரு **i, ii, iii**இல் காட்டப்பட்டவாறு தென்பட்டது.

i) உரு **i**இல் காட்டப்பட்ட பொருள் **a** ஒளி ஊடுகாட்டும் பதார்த்தம் இவ்வாறு

உரு **ii**இல் **b** --------------------------

உரு **iii**இல் **c** --------------------------

ஆகியவற்றை இனங்காண்க.

ii) பின்வரும் பொருட்களை ஊடுகாட்டும் பொருள்/ ஊடு காட்டாத பொருள் / ஊடுகசியும் பொருள் என வேறுபிரித்துக் காட்டுக.

| உலோகத் தகடு / பலகை / மெல்லிய கண்ணாடி / கறுப்பு கடதாசி / பூவேலையிடப்பட்ட கண்ணாடி / எண்ணெய் தேய்க்கப்பட்ட கடதாசி / தெளிந்தநீர் / நிறமற்ற பொலித்தீன் |
|---|

| ஒளிரும் ஊடு காட்டும் பொருள் | ஒளி ஊடு கசிய விடும் பொருள் | ஒளி ஊடுகடத்தாப் பொருள் |
|---|---|---|
| உ+ம் - நிறமற்ற பொலித்தன் | --------------- | --------------- |
| -------------------------- | --------------- | --------------- |
| -------------------------- | --------------- | --------------- |
| -------------------------- | --------------- | --------------- |

iii) வீடுகளில் ஜன்னலுக்கு கண்ணாடி இடப்படுவதன் நோக்கம் என்ன?

**(08பக்கம் பார்க்க)**

**செல்வி சுஜாதா வினாயகமூர்த்தி**
**கட்டுறுப்பயில்வு ஆசிரியை (கிளி/ பளை மத்திய கல்லூரி)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு.பிரான்சிஸ் தோமஸ் எடிசன்**
**விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 6** | **விஞ்ஞானம்** | **அலகு 05**


(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஒளியும் பார்வையும்

**04. பனிபடந்த காலைப் பொழுதில் மரக்கிளைகளினூடாக வரும் ஒளியை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இவை ஒளிக்கற்றைக ளாகும். ஒளித்திரை அம்புக்குறி கொண்ட நேர்கோட்டினால் காட்டமுடி யும். ஒளிக்கற்றைகளை ஒளிக்கதிர்கள் சேர்ந்து உருவாக்கின்றன.**

I) 

உரு I




உரு II

மேற்படி உரு I, உரு IIஐ இனங்காண்க?

உரு - I - ------------------------------

உரு - II - -------------------------

II) தரப்பட்ட உருவானது ஒளிக்கற்றைகள் பல ஒளிக்கதிர்களால் ஆக்கப்பட்டன என்பதைக் காட்டுவதற்கான அமைப்பாகும்.




a) தரப்பட்ட உருவின் ஒளிக்கதிர், ஒளிக்கற்றை என்பவற்றை குறித்துக் காட்டுக.

**05. விஞ்ஞானத்தின் விருத்தியினால் ஒளியை நாம் பல்வேறு தேவை களுக்குப் பயன்படுத்துகிறோம். a என்ற அடைப்பினுள் காட்டப்பட் டுள்ளது போல ஏனைய அடைப்புக்களினுள் ஒளியின் பயன்களை எழுதுக.**

I)

**ஒளியின் பயன்கள்**

a) தொடர்பாடல் தேவைகளுக்குப் பயன்படும்

b)

c)

d)

e)

II) தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

a) தாவரங்கள் உணவு உற்பத்திக்கு தேவையான சக்தியை சூரிய ஒளியிலிருந்து பெற்றுக் கொள்கின்றன. (✓)

b) எமது பிரதான ஒளிமுதல் சந்திரனாகும். ( )

c) வீதிச் சமிக்ஞை விளக்குகள் எமது பாதுகாப்பை உறுதி செய்கின்றன. ( )

d) மின்குமிழை கண்டுபிடித்தவர் தோமஸ் அல்வா எடிசன் ( )

III) நவீன உலகில் மருத்துவத்துறையில் (என்டஸ்கோபி) அகங்காடியா னது பெருமளவு மாற்றத்தை உண்டாக்கியுள்ளது. என்டஸ்கோபி மூலம் உடலின் உட்புற அங்கங்களை ஒளியூட்டி மருந்துவ சோதனைகளை மேற்கொள்ள முடியும்.





a) படத்தில் காட்டப்பட்ட உபகர ணத்தின் பெயர் யாது?

b) மேற்படி உபகரணத்தின் பயன்பாடு யாது?

c) ஒளியியல் நார் தொழில் நுட்பத்தின் பயன்பாடுகள் 02 தருக?

IV) தரம் - 06 ஐச் சேர்ந்த தருண், அருண் ஆகியோர் மெழுகுதிரிச் சுவா லையை அவதானிப்பதற்காக ஒவ்வோர் குழாயினைப் பயன்படுத்திமை உருவில் காட்டப்பட்டுள்ளது.




a) தருண், அருண் ஆகியோரில் யாருக்கு மெழுகுதிரிச் சுவாலை தென்படும்?

-----------------------------------------------------------

b) இச் அவதானிப்பினூடாக நீர் பெற்றுக் கொள்ளும் முடிவு யாது?

-----------------------------------------------------------

**செல்வி சுஜாதா வினாயகமூர்த்தி**
**கட்டுறுப்பயில்வு ஆசிரியை (கிளி/ பளை மத்திய கல்லூரி)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு.பிரான்சிஸ் தோமஸ் எடிசன்**
**விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

# திருமணம் செய்தவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம்!

## விதித்துத் தீர்ப்பளித்தது மல்லாகம் நீதிமன்று

பண்டத்தரிப்பு பகுதியில் சுகாதார விதிமுறைகளை மீறி திருமணம் செய்த மணமகனுக்கு மல்லாகம் நீதி மன்றம் 20ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பண்டத்தரிப்பு பகுதியில் கடந்த 4 ஆம் திகதி திருமண நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது, அதிகளவானோர் திருமண நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் சுகாதாரப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்து மணமக்கள் குடும்பத்தினர் உட்பட திருமணத்தில் கலந்து கொண்டவர்களைத் தனிமைப்படுத்தி இருந்தனர்.


அவ்வாறு தனிமைப்படுத்தி இருந்த 78 பேருக்கு கடந்த 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோ தனையில் 13 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி யாகி இருந்தது.

இந்நிலையில் சுகாதாரப் பிரிவினரிடம் திருமணத்துக் கான அனுமதியை மணமகனே பெற்றிருந்தமையால், மணமகனை பிரதிவாதியாக குறிப்பிட்டு மல்லாகம் நீதி வான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மணமகன் குற்றத்தை ஏற்றுக்கொண்டமையை அடுத்து, மணமகனை நீதி வான் கடுமையாக எச்சரித்து, 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

இதேவேளை மணமகனின் சகோதரர் தனிமைப்படுத் தப்பட்டு இருந்த நிலையில், சுகாதாரப் பிரிவினரின் அனு மதிகள் இன்றி வெளிநாடு சென்றுள்ளார்.

அவர் தொடர்பிலான தகவல்களையும் சுகாதாரப் பிரிவினருக்கு வழங்கி அவர்களின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு நீதிவான் அறிவுறுத்தி இருந்தார்.


அம்பாள் தேரேரி வரும் மாட்சி

15

# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

- வே.வரதசுந்தரம் -

**மடியின்றிப் படிக்கும்**
**மாணவர் தமக்கு**
**ஆறறிவு தாராய்**
**ஆச்சிநீ காளி!**
**வன்செயல் வாட்டியும்**
**கண்ணெனக் கல்வி**
**நாடுவார் காப்பாய்**
**ஆச்சிநீ காளி!**

இவ்வாறு காளி ஆச்சியை ஏத்தித் தொழுத காளி பக்தர்கள் தேர்த்திருவிழாவன்று 'எங்கள் ஈஸ்வரி தேரினில் ஏறிவரும் பவனிபார்' - என்று வியந்து போயினர்.

இறைவனின் அழித்தல் தொழிலைக் குறிப்பது தேராகும். இது பரந்து எரியும் அக்கினியின் தோற்றம். தேர்கூறும் தத்துவத்தை எண்ணிப் பார்ப்போம். தேரின் பாகங்கள் பிரபஞ்சத்தையும், அதன்பீடம் இதயத்தையும் குறிப்பன. உற்சவ மூர்த்தியைப் பீடத்தில் இருத்தியதும், தேரோடுவது போன்று எமது இதயங்களில் இறைவியை எக்காலும் உபாசனை செய்ய எமது வாழ்க்கைத்தேர் சீரும் சிறப்புடன் ஓடும்.

தேரோடும் பாதையில் சறுக்குக்கட்டு வைப்போம் அல்லவா? அதுபோன்று எமது வாழ்க்கைத்தேர் நேரியவழியில் செல்ல, ஆமாறு செல்ல நாம் அதனை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

தேரடியில் தேங்காய்களைச் சிதறடித்து வழிபடும் அடியார்கள் தமது துயரங்களைச் சிதற வைக்கின்றார்கள். தேர் வீதிவலம் வந்ததும், அம்பாளுக்கு பச்சை சாத்துவோம். உக்கிர மூர்த்தியாக அவள் அழித்தல் தொழிலாற்றி வந்ததும் அவளைக் குளிர்விக்கும் பாவனை அது.

பத்திரகாளி அம்பாள் தேர்த்திருவிழாவன்று வீதி வலம் வருகையில் தேர்ச்சிந்து பாடப்பெறும். நான் சிறுவனாக இருந்த காலத்தில் கோயிலடியில் வாழ்ந்த திரு. கணேஷ் என்பார் இனிமையாகத் தேர்ச்சிந்து பாடுவது கேட்டு யான் மகிழ்ந்ததுண்டு. இன்றும் அவர் குடும்பத்தினர் தேர்ச்சிந்து பாடும்பணியில் ஈடுபடுகின்றார்கள்.

காளி ஆச்சிமீது இத்தேர்ச்சிந்து பாடிய வேலாயுத பிள்ளை அந்நாள்களில் திருகோணமலை வித்தியாலயம் வீதியில் அச்சகமொன்றினை நடாத்தினார். அத்துடன் திருகோணமலை இந்துக்கல்லூரியில் சங்கீத ஆசிரியராக இருந்தவர். மக்களிடையே நாடக ஈடுபாட்டினை வளர்த்த நாடக ஆசிரியராவார். அன்னார் 1927இல் மறைந்தார். அத்தேர்ச்சிந்து பாடலொன்றைப் பார்ப்போமா?

**சித்திர ரதந்தனிலே தேவியெழுந்திடல்**
**செய்ய கண்காட்சி மாட்சியே**
**இத்திருகோணையின் பத்தருக்கேயருள்**
**உத்தமி சாம்பவி சித்தமிரங்கியே!**

1972 ஆம் ஆண்டு இக்கோயிலுக்கு மூன்று சித்திரத்தேர்களும், மஞ்சமும் செய்யப்பட்டன. கிழக்கு இலங்கையில் முதன்முதலாகச் செய்யப்பட்ட சித்திரத் தேர் இதுவாகும் என்பார்கள். 1981 ஆம் ஆண்டு இம்மூன்று தேர்களையும் பாதுகாக்க வேண்டி தேராலயம் கட்டப்பட்டது.

இச்சித்திரத் தேர்களை உருவாக்கியவர் சிற்பாசிரியர் ஜீவரெட்னம் உள்ளூர் சிற்பாசிரியர்களில் முதலிடம் வகிக்கின்றார். இவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாசிரியரின் புதல்வர்களில் ஒருவர். கிழக்கு மாகாணத்திலே முதன்முதலாகச் சித்திரத் தேரைப்பெற்ற பெருமை திருகோணமலை பத்திர காளி அம்பாள் ஆலயத்துக்கு உரியது. அந்தச் சித்திரத் தேரைக் கலைவண்ணத்துடன் அமைத்த பெருமை ஜீவரத்தினம் ஆசாரியாருக்கு உரியது. மரக்கட்டைகளில் உணர்ச்சிகளைத் தேக்கிக் கலைவண்ணம் கண்டகைகள் ஜீவரத்தினம் ஆசாரியாரின் கரங்கள்.

தேரோடும் கோயில் வீதியில் ஒருபக்கத்தை தனது காளியாச்சி அனுபவத்தை கூறக்கேட்டு அம்பாள் அடியார்கள் இன்புறுவர். அவர் ஓய்வுபெற்ற ஆசிரியை, திருகோணமலை சத்தியசாயி சமித்தி மகளிர்குழு தலைவி, தனது திறமையால், சேவையால் சமூகத்தின் பாராட்டைப்பெற்ற எனது முன்னாள் மாணவி பத்திரகாளி அம்பாள் பக்தை திருமதி ஸ்ரீதேவி சிவரெட்னராஜா. அவ்வனுபவம் கேளீர்!


சாயி, அம்பாள் பக்தை ஸ்ரீதேவி

'பல்லாண்டுகளுக்கு முன்னர், தேர்த்திருவிழா நாளது. சித்திரத் தேரேறி அருள்பாலிக்க தேருலாவரும் காளியாச்சியைத் தரிசிக்க நாங்கள் குடும்ப சமேதராய் காளிகோயில் சென்றிருந்தோம். ஆறு வயதான எனது இளையமகன் தானும் தேரிழுக்கப் போவதாக அடம் பிடித்தார். எனது கணவரோ 'என்னால் சனநெருக்கத்துக்கு உள்ளே வரமுடியாது' என்று மறுத்துவிட்டார்.

நானும் எனது புதல்வர்களும் சனத்திரளினுள் நுழைந்து ஒருவாறு தேரடிக்குச் சென்றுவிட்டோம். கல்யாண மண்டபத்துக்கு அருகில் தேர்நின்றது. முன்னாற் சென்ற பிள்ளையார் தேர் வடத்தைப் பிடிக்கச் சென்றோம். ஒருவாறு வடத்தின் நுனி கிடைத்தது. இளைய மகன் மாத்திரம் அதனைப் பிடித்துக் கொண்டார். மூத்தவன் தன்னால் பக்தர் கூட்டத்தில் இடிபட முடியாதெனக் கூறினார். நானும் மூத்த மகனும் அருகில் அடியார் கூட்டத்துடன் நின்றோம்.

தேர் வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது. அவ்வேளை, பிள்ளையார் தேர் வடம் பிடித்திழுத்துக் கொண்டிருந்த அடியார்கள் எல்லோரும் திடுதிடுவெனக் கீழே வீழ்ந்து கொண்டிருந்தனர். அதிர்ந்து போன அடியார்கள் 'அரோகரா! அம்பாளுக்கு அரோகரா!' என்று உரத்துக் குரலெழுப்பினர். எனது மகன் நின்ற இடத்தைப் பார்த்தேன். அவரைக் காணவில்லை. அவர் மீது அனைவரும் விழுந்து கிடந்தனர். கண்மூடி விழிக்க முன்னர் இத்தனையும் நடந்தேறிவிட்டது. நானும் மூத்தமகனும் செய்வதறியாது திகைத்து நின்றோம். 'காளி ஆச்சி! பிள்ளையைக் காப்பாற்றித் தா' என்று கைகூப்பி அலறினோம்.

அருகில் நின்ற தொண்டர்கள் விழுந்து கிடந்தவர்களை ஒவ்வொருவராகத் தூக்கியெடுத்துக் கொண்டிருந்தனர். நாங்கள் ஓடோடிச்சென்று பார்த்தபோது, உடல் முழுவதும் மண்பூசப்பட்டு கீழே விழுந்து கிடந்த என் மகனையும் அவர்கள் வெளியே தூக்கிவிட்டனர். மகன் அறிவிழந்து கிடப்பாரோ, உடலெல்லாம் இரத்தக் காயங்களுடன் துடிப்பாரோ என்றெல்லாம் ஏங்கித் தவித்த எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

எவ்வித உடல்நோவுமின்றி சர்வசாதாரணமாக என்மகன் எழுந்து வந்தான். அவனை இறுகக் கட்டித்தழுவினேன். பக்திமிகுந்து கண்ணீர் உகுத்து, நான் அலறியது கேளீர்:-

**'காளி ஆச்சி எங்கள் கண்கண்ட தெய்வம்'**

(தொடரும்......)

# கல்முனை கரையோர அபிவிருத்தி தமிழ்ப் பிரதேசங்கள் புறக்கணிப்பு!

## கூட்டத்திற்கு தமிழ் உறுப்பினர்களுக்கு கதவடைப்பு என ராஜன் சீற்றம்

( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை மாநகர கரையோர அபிவிருத்தித் திட்டத்தில் தமிழ்ப்பிரதேசங்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பாக இடம்பெற்ற திட்டமிடல் கூட்டத்துக்கு தமிழ் பிரதேச செயலாளர் மற்றும் மாநகரசபை தமிழ் உறுப்பினர்களுக்கு எவ்வித அழைப்பும் விடுக்கப்படாமல் கதவடைப்பு இடம்பெற்றுள்ளது. மாநகர அபிவிருத்தியில் இனரீதியான பாகுபாடு தொடர்கிறது. கொரோனாவை விட கொடியவர்கள் இவர்கள்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் பெரும்விசனத்துடன் தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபை எல்லைக்குள் தமிழ்ப் பிரதேசங்கள் இல்லையா? தமிழர்கள் இல்லையா? என கேள்வியெழுப்புகிறார் ராஜன்.

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட சாய்ந்தமருது தொடக்கம் பெரியநீலாவணை வரை கடற்கரை சூழலை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் கல்முனை மாநகரசபை முதல்வரின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தலைமையில் இடம்பெற்றது. இதில் மாநகரசபை மேயர் மற்றும் அதிகாரிகள் கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் உட்பட பலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

கல்முனை மாநகர கரையோர அபிவிருத்தி திட்டமிடல் குழுவின் இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக மாநகரசபையின் தமிழ் உறுப்பினர்களுக்கோ கல்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கோ எந்த அறிவித்தலும் வழங்கப்படாமலும் அழைக்கப்படாமலும் நடைபெற்றுள்ளது. குறித்த திட்டம் தொடர்பில் கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்திலும் மாநகர சபையிலும் இருவேறு கூட்டங்கள் நடந்துள்ளன.

இந்தக் கூட்டங்களுக்கு தமிழர்கள் அழைக்கப்படவில்லை. தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு கதவடைப்பு இடம்பெற்றமை தொடர்பாக உறுப்பினர் ராஜன் மேலும் கூறுகையில் –

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட கடற்கரை பகுதிகள் எனும்போது சாய்ந்தமருது கல்முனைக்குடி மருதமுனை ஆகிய மூன்று முஸ்லிம் கிராமங்களும் கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை ஆகிய மூன்று தமிழ் கிராமங்களும் உள்ளன. ஆனால், தமிழ் தரப்புக்கு இது தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

கல்முனை மாநகர சபை என்பது தனியாக முஸ்லிம்களுக்கு மட்டுமானது அல்ல. கல்முனை மாநகர மேயரினதும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸினதும் செயற்பாடு தமிழர்களைப் புறக்கணிப்பதாகவும் இனவாதமாகச் செயற்பட்டு வங்குரோத்து அரசியல் செய்வதாகவுமே தொடர்கிறது.





இப்படிப்பட்ட தொடர் புறக்கணிப்பும் பாகுபாடுமே தமிழ்மக்கள் தனியான பிரதேச செயலகம், தனியான நகரசபை கோருவதற்குக் காரணம் என்பதை மறக்கக்கூடாது. இவர்களிருவரினதும் செயற்பாடுகளை வைத்து முழு முஸ்லிம் மக்களையும் குற்றம்சாட்ட முடியாது. இவர்கள்தான் காலாகாலமாக ஒற்றுமையாக விருந்த தமிழ்முஸ்லிம் சமூகங்கள் பிரிந்து நிற்பதற்குக் காரணம். கல்முனையில் இருசமூகங்களும் இன ரீதியாகப் பிளவுபடுவதற்கு இவர்கள் இருவரும் தொடர்ச்சியாகப் பாடுபட்டுவருகின்றனர். இந்த லட்சணத்தில் இன ஐக்கியம் பற்றியும் பேசிவருகின்றனர்.

கல்முனை நகர அபிவிருத்தித் திட்டம் கொண்டு வரப்பட்டபோதும் வேண்டுமென்றே தமிழ்ப் பிரதிநிதிகளை அழைக்காமல் அத்தனை கூட்டங்களையும் திரைமறைவில் நடத்தினார்கள். நாம் பூரணமாக எதிர்த்தோம். அதனால் அந்தத் திட்டம் கிடப்பில் உள்ளது. முஸ்லிம் சகோதரர்கள் இந்த உண்மையை தெரிந்துகொள்ளவேண்டும்.

தமிழர் பகுதிக்குள் உள்ள இஸ்லாமாபாத் கல்முனைக்குடி மற்றும் மருதமுனை பகுதிகளில் கார்ப்பெட் வீதி போடப்பட்டுள்ளது. ஆனால் அருகிலுள்ள தமிழ்க் கிராமங்களுக்கு அது மறுக்கப்பட்டுள்ளது. இன்றும் யாரும் அதனை நேரடியாகக் காணலாம்.

மாநகரசபைக்குட்பட்ட வாசிகசாலைகளில் மருதமுனையில் புனரமைப்பு நடக்கிறது .ஆனால் பாண்டிருப்பு பெரியநீலாவணை, கல்முனை தமிழ்ப்பகுதிகளில் உள்ள நூலகங்கள் எவ்வித புனரமைப்போ அபிவிருத்தியோ இல்லாமல் பாழடைந்து அப்படியே காணப்படுகின்றன.

மலசலக்கூட கழிவுகளை கொண்டுவந்து முன்னாள் அமைச்சர் மன்சூர் கட்டிய நூலகத்துக்கு பின்னாலுள்ள தமிழர் பகுதிகளுக்குள் கொட்டுவது இஸ்லாமாபாத் மலசலக்கூடகழிவுகளை கல்முனை பன்சல முன்பாகவுள்ள வடிகானுக்குள் விடுவது தொடக்கம் பெரியநீலாவணை தோணாக்களை திட்டமிட்டு நிரப்புவது வரை தொடர்ச்சியாக பாரபட்சங்கள், ஆக்கிரமிப்புகள் இனரீதியாகத் தொடர்கின்றன.

பெரியநீலாவணை கல்முனை மாநகர கடற்கரை அபிவிருத்தி எனும் விடயத்தை தலைப்பாக கொண்டு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. ஆனால் சரி சமமாக தமிழ் கிராமங்கள் உள்ளபோதும் எமக்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை.

இந்தத் திட்டத்தினுள் சாய்ந்தமருது கடற்கரைப் பூங்கா, கல்முனை பூங்கா, மருதமுனை கடற்கரைப் பூங்கா ஆகிய இடங்கள் புனரமைப்புச் செய்யப்படவிருக்கின்றனவாம். அப்படியெனின் கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் கடற்கரைப்பூங்காக்கள் இல்லையா? அல்லது கடற்கரையே இல்லையா? ஏனிந்த பாரபட்சம்? பச்சை இனவாதத்தை கக்குகின்ற மேயராக அவர் வரலாற்றில் இடம்பெறுகிறார்.

எனவே இன ரீதியாக சிந்தித்து இனவாதத்தை விதைத்து மக்களைக் கூறுபோடுவது அவர்களா? நாங்களா? முஸ்லிம் மக்களே சிந்தியுங்கள். நியாயமான அரசியல்வாதிகளே உணருங்கள். இவர்களது பாரபட்சம் மற்றும் பாகுபாடுகளே தமிழ்மக்கள் தனியான பிரதேச செயலகம், தனியான நகரசபை கோருவதற்குக் காரணம் என்பதையும் மறக்கக் கூடாது.

இப்படி இனரீதியாக தொடர்ச்சியாக செயற்படும் மேயருக்கு இப்போதும் எமது சில தமிழ் உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவு வழங்குகின்றமை நீதியா ? நியாயமா? இதற்குப் பின்னால் கையூட்டல்கள் இருக்கின்றனவோ என சந்தேகிக்க வேண்டியுள்ளது.

கல்முனை மாநகர சபை என்பது அனைத்து இனங்களுக்கும் பொதுவானது. தங்கள் அதிகாரங்களை வைத்து பக்கச்சார்பாக செயற்படுவதாயின் கல்முனை மாகரசபையை பிரித்து கல்முனை வடக்கு நகர சபை ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும். – என்றார்.

குறித்தகூட்டம்பற்றிமாநகரசபைஉறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், க.செல்வராஜா, க.சிவலிங்கம் குபேரன் ஆகியோரிடமும் கேட்டபோது தங்களுக்கும் எந்த அழைப்பும் தகவலும் கிடைக்கவில்லை என்றனர்.

## வடக்கில் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கல்

### அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)

வடக்கு மாகாணத்தில் உள்ள தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு எதிர்வரும் வாரம் முன்னுரிமை அடிப்படையில் கொரோனாத் தடுப்பூசிகள் வழங் கப்பட இருக்கின்றன என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் –

கொவிட் – 19 பரவலைக் கருத்திற்கொண்டு அடுத்த வாரம் வடக்கில் உள்ள தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அந்தவகையில் முதற்கட்டமாக 9 ஆயிரத்து 500 தடுப்பூசிகள் இவ்வாறு தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக கிளிநொச்சி, வவுனியா



மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கப்படும்.

வடக்கில் தடுப்பூசிகளை துரிதமாக வழங்க வேண்டிய தன் அவசியம் தொடர்பாக எம்மால் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து விரைவாக தடுப்பூசிகளை வழங்குமாறு துறைசார் அதிகாரிகளிடம் அமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார் எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## மின்சார முறைப்பாடுகளைத் தெரிவிக்க விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

மின்சார முறைப்பாடுகள் தொடர்பாக விசாரித்து தீர்வு காணும் வகையில் மின்சாரத்துறையின் ஒழுங்குறுத்துகை நிறுவனமான இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அவசர தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகம் செய்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா பிரச்சினை காரணமாக மின்சார பாவனையாளர்கள் முறைபாடுகளைத் தெரிவிக்க 0775 687 387 என்ற அவசர தொலைபேசி இலக்கம் ஊடாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவைத் தொடர்புகொள்ளலாம்.

இந்த இலக்கத்தினூடாக வாட்ஸ்அப், வைபர் மற்றும் IMO மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

இதுதொடர்பாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா பிரச்சினை காரணமாக மின்சார பாவனையாளர்கள் முறைப்பாடுகளை 0775 687 387 என்ற அவசர தொலைபேசி இலக்கம் ஊடாக முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

பாவனையாளர்கள் தங்கள் எழுத்து மூலமான முறைப்பாடுகளை ஒரு புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளத்தின் ஊடாக பதிவேற்றுவதன் மூலம் அல்லது குறுந்தகவலாக டைப் செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறுகிய காலத்தில் சிறப்பான சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி (இருப்பின்), மின்சார கணக்கு இலக்கம், முறைப்பாட்டு விடயம், தொடர்புடைய இணைப்புகள் (இருப்பின்) ஆகியவற்றை குறிப்பிடுமாறு பாவனையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், குறிப்பு இலக்கமொன்று பாவனையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

விசாரணைகள் தொடர்பில் கேட்டறியவும், முறைப்பாடுகளை தாக்கல் செய்யும் போது ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் பாவனையாளர் மேற்படி இலக்கத்தின் ஊடாக ஓர் அதிகாரியைத் தொடர்பு கொள்ளலாம்.

அதற்கமைய அதிகாரிகளை நேரில் சந்திப்பதைத் தவிர்த்து ஒன்லைன் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக அதிகாரிகளை தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்களும், ஏனைய பங்குதாரர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இச் சேவைக்கு மேலதிகமாக, பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்கள் 0112392607 அல்லது 0112392608 என்ற தொலைபேசி இலக்கங் கள் மற்றும் infopucsl.gov.lk அல்லது customers-pucsl.gov.lk அல்லது www.facebook.com/pucsl ஊடாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை தொடர்பு கொள்ள முடியும்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்



## ஓர் அனுபவத் தொடர்

அங்கம் 7

எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்தியம்.




முதலாவதாக வைத்தியசாலை பணிப்பாளரினை அணுகியபோது எனது அன்ரி கொரோனா நோயால் இறந்தார் என உறுதிப்படுத்திய கடிதம் யாழ் சுகாதார வைத்திய அதிகாரிக்கு (MOH) வழங்கப்பட்டது.

அக்கடிதத்தின் பிரகாரம் MOH, மாநகரசபை ஆணையாளருக்கு கொரோனா நோய் காரணமாக இறந்தவரின் சடலத்தினை கோம்பையன் மணல் மயானத்தில் எரிப்பதற்கான அனுமதி கேட்டு கடிதம் என்னிடம் வழங்கப்பட்டது. அக்கடிதத்துடன் மாநகரசபைக்குச் சென்று அன்ரியினது உடலை எரிப்பதற்கான கட்டணம் ரூபா 6,500 இனை செலுத்தி அனுமதிச்சீட்டுபெறப்பட்டுஅதுமயானகாவலாளியிடம் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் மலர்ச்சாலை சென்று பெட்டி, வாகனம் என்பன எடுக்க என்னிடமிருந்து என்னைச் சுற்றி வைத்தியசாலை ஊழியர் உட்பட பல தரகர்கள் என்னை சூழ்ந்து நின்றனர். அந்தவேளை எமக்கு சாவு வீடு அவர்களுக்கு வியாபாரம் என நினைத் துக்கொண்டேன். அவ்வாறு ஒருவரது உதவியுடன் அவற்றை ஒழுங்கு செய்து Gate Pass இனை கொடுத்த அதேசமயம் என்னால் ஒழுங்குப்படுத்தப்பட்ட மலர்மாலையையும் அவர்களிடம் கையளித்து அமரருக்கு போடுமாறு வேண்டிநின்



றேன்.

அதேவேளை அமரரின் குடும்பத்தினர், உறவினர் மற்றும் எனது மனைவி மயானத்திற்கு அழைத்துச் சென்று அப்பகுதியின் பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுசரணையில் மின்மூலம் தகனம் செய்யப்பட்டது. இவ்வேளை முடிந்தளவு அண்மையில் இருந்து எமது இறுதிக்கடமையினை குறிப்பாக அவரது கணவர் இறுதிக்கடமையினை செய்ய முடிந்ததை நினைத்து மனம் ஆறுதலடைந்தோம்.

மரணச்சடங்கின் பின்னர் தொடர்ந்து நானும் குடும்பத்தினருடன் சுயதனிமைப்படுத்தலில் இருந்தோம். ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டிருந்த அன்ரியின் கணவர் (சித்தப்பா) மற்றும் மகளுக்கு மேற்கொள்ளப்பட்ட கொவிட் பரிசோதனையில் அவர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையினால் 2021மே 22ஆம் திகதி அன்றிலிருந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் எமது வீடு உத்தியோகபூர்வமாகத் தனிமைப்படுத்தப்பட்டது.

கடந்த மே 07ஆம் திகதியிலிருந்து நான் அலுவலகத்திற்கு கடமைக்குச் செல்லாதது மனதில் ஒரு வெறுமையை ஏற்படுத்தியது. எனது 24 வருட அரச சேவைக்காலத்தில் நான் ஒருபோதும் நீண்ட நாள் கடைமைக்குச் செல்லாது வீட்டில் நின்றதில்லை. இது எனக்கு மனதிற்கு சங்கடமாக இருந்த நிலையில் நான் கடந்த மே 26ஆம் திகதி எவ்வாறாவது அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் யாழ் சுகாதார வைத்திய அதிகாரியை தொடர்பு கொண்டு, நிலைமையை விளக்கி உடனடியாக இன்றே அலுவலகம் செல்வதற்காக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டபோது அவரும் PCR பரிசோதனை உடனே செய்வதற்கு வாய்ப்புகள் இன்று இல்லை எனவும், RAT(Rapid Antigen Test) இனை செய்துவிட்டு கடமைக்குச் செல்லலாம் என ஆலோசனை வழங்கினார்.

### Rapid Antigine Test (RAT) பரிசோதனை

கொவிட் - 19 Rapid Antigine Test (RAT) பரிசோதனையானது விரைவான நோயறிதல் பரிசோதனை ஆகும். இது வைரஸ் புரதங்களினை கண்டறிகிறது. இதற்காக மூக்கு அல்லது தொண்டையிலிருந்து ஒரு துணியினால் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. இப்பரிசோதனை PCR இனை விட மலிவானதாகும். மேலும் Antigine பரிசோதனை PCR இனை விட துல்லியம் குறைவானவை என்றாலும் விரைவாக முடிவுகளினை வழங்கக்கூடியது. சமூகத்தில் அதிக வைரஸ் புழக்கத்தில் இருக்கும் போது அவை மிகவும் தொற்றுநோயாக இருக்கும் நேரத்தில் ஒரு நபரிடமிருந்து மாதிரிகள் எடுக்கும்போது இந்த சோதனைகள் சிறப்பாக செயல்படுகின்றன. இப்பரிசோதனையில் நேரடியாக Positive or Negative என மட்டுமே கண்டறிய முடியும். எனினும் Q - PCR பரிசோதனை மூலமாக கண்டறியப்படும் வைரஸின் தாக்கத்தினை CT பெறுமானம் போன்று கண்டறியமுடியாது என்றும் குறிப்பிடத்தக்கது. மேலும் Positive என வந்தவருக்கு மீள PCR செய்யப்படின் பெரும்பாலும் Positive ஆகவே அமையும். எனினும் Negative வந்தவருக்கு PCR இல் Positive ஆக வர வாய்ப்பு உள்ளது எனவும் அறிந்து கொண்டேன்.


எனது மனைவியும் தானும் நீண்ட நாள்களாக அலுவலகம் செல்லவில்லை எனக்கூறி என்னுடன் இணைந்து இப்பரிசோதனையை மேற்கொள்ள




தயாராக இருந்தார். நான் எவ்வித பரிசோதனையும் மேற்கொள்ளாது எனது சக உத்தியோகத்தர்களையோ, விவசாயிகளையோ சந்திப்பதை விரும்பவில்லை. நான் ஏற்கனவே கூறியதுபோல என்னால் யாருக்கும் - குறிப்பாக எனது குடும்பத்தினருக்கோ என்னைச்சுற்றி இருப்பவர்களுக்கோ - தொற்று ஏற்படக்கூடாதென்பதில் மிகவும் கவனமாக இருந்தேன். அலுவலக கடமைக்குச் சென்று நீர்ப்பாசனக் கொத்தணியை ஏற்படுத்த விரும்பவில்லை .

எமக்கு நோய்த்தாக்கம் ஏற்படும் என நன்கு தெரிந்திருந்தும், எமக்கு இந்த முடிவு POSITIVE ஆக உறுதி செய்யப்பட்டு விடக் கூடாது என்ற நப்பாசையிலேயே இருந்தோம். எனினும் அவ்வாறு நடைபெறவில்லை என்பது கவலையாகத்தான் இருந்தது. ஆனாலும் நிலைமையைச் சுதாகரித்து நேர்விளைவாகக் கருதி இதனை எதிர்கொள்ள தயாராகவே இருந்தேன். மேற்கொள்ளப்பட்ட RAT (Rapid Antigen Test) பரிசோதனை முடிவின் பிரகாரம் எனக்கு நோய்த்தொற்று இருப்பதாகவும் எனது மனைவிக்கு தொற்று இல்லை எனவும் உறுதி செய்யப்பட்டது.

2021மே 27ஆம் திகதி அடுத்த நாள் IDH கோப்



பாய் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு என்னை அழைத்துச் செல்வதாக கூறினார்கள். அன்றைய தினம் வீட்டில் மிகவும் பரபரப்பாக தனிமைப்படுத்தல் நிலையம் செல்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனது மனைவியும் மகளும் எனக்கு கொண்டு செல்ல தேவையான பொருள்களை எடுத்து வைத்தார்கள். அவற்றுள் உணவுப் பொருள்கள், உடைகள், தலையணை, இலகுவாக உணவு தயாரிக்க தேவையான பொருள்கள் என அவர்களால் ஊர்ஜிதப்படுத்திய அத்தியாவசியப் பொருள்களை நேர்த்தியாக அடுக்கிவைத்து ஏக்கத்துடன் அமர்ந்திருந்தனர்.

அத்துடன் நான் அறிந்தவரையில் கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு வருபவர்கள் எவ்வித வழிகாட்டுதலும் இன்றி, பாவிப்பதற்கான எந்தவித பொருள்களும் இல்லாத நிலையில் அங்குவந்து 10 நாள்களும் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்குகின்றார்கள் என அறிந்தேன். எனவே கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்களை கட்டாயம் தனிமைப்படுத்தலுக்காக வருபவர்கள் கொண்டுசெல்ல வேண்டும் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விளைகின்றேன். (அங்கு பணமிருந்தாலும் தேவையான பொருள்களை கொள்வனவு செய்ய முடியாது)

1. சுடுநீர்ப்போத்தல் 2. நீர்க்குவளை 3. படுக்கை விரிப்பு 4. தேவையான உடை 5. சவர்க்காரம் 6. சவர்க்கார தூள் 7. பற்தூரிகை, பற்பசை 8. பத்திற்கும் குறையாத முகக்கவசம் 9. தண்ணீர் போத்தல் 10. பிஸ்கட் (கிரீம் அல்லாத) 11. பழங்கள் 12. வேறு நோய் உள்ளவர்கள் அவர்களது சிகிச்சை அட்டை, கொப்பி, மாத்திரைகள்

- என்பவற்றை தவறாது எடுத்துச்செல்ல வேண்டும்

தொடரும்

# மட்டக்களப்புக் கொலைச் சம்பவத்தை மறைக்க முற்படுகிறார் வியாழேந்திரன்

## பல விடயங்களை போட்டுடைத்தார் கருணா



தமிழரொருவர் தமிழரை சுடுவதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என கிழக்கு மாகாணத்தினுடைய பிரதமரின் இணைப்புச் செயலாளர் விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா) தெரிவித்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பில் வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரால் நபரொருவர் மீது மேற்கொள்ளப்பட்ட சம்பவம் முற்றுமுழுதாக ஒரு கொலை. இது தொடர்பில் உரியவாறு விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதமொன்றை அனுப்பியிருக்கின்றோம்.

ஏனென்றால் மெய்ப்பாதுகாவலராக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை நியமிப்பது தான் வழக்கம். எம்.எஸ்.டி. என்று சொல்லப்படுகின்ற அமைச்சு பாதுகாப்பு பிரிவு என்பது உண்மையிலே அனுபவம் வாய்ந்த சிறந்த அதிகாரிகளை நியமிப்பது தான் அரசாங்கத்தின் கடமை.

ஆகவே அதனை மீறி அனுபவமற்ற ஓர் இளைஞன் அதுவும் ஒரு தமிழ் இளைஞன் – இவ்வாறு தனது துப்பாக்கியால் கொலை செய்திருக்கின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

பொறுப்பு வாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் முன்னுக்கு பின் முரணான செய்திகளை வெளியிட்டு அந்த பாரிய கொலைச் சம்பவத்தை மறைப்பதற்கு முற்பட்டு வருகிறார்.

ஏனென்றால் மூன்று மாதமாக தனது வீட்டு சி.சி.டி.வி. கமெரா வேலை செய்யவில்லை என்பதும், பக்கத்து வீட்டு கமரா கூட வேலை செய்யவில்லை என்பதும், கண்மூடித்தனமான சிறுபிள்ளைத்தனமான செயற்பாடு. இதனைத் துப்பறியும் ஆய்வகத்துக்கு அனுப்புகின்ற போது அவர்களால் எதனையும் மறைக்க முடியாது. இந்த கொலையை மறைக்க முற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது இதனை அவர் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழரொருவர் தமிழரை சுடுவதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எடுத்தவுடனேயே அவர் துப்பாக்கியால் சுட்டிருக்கின்றமை ஒரு திட்டமிடப்பட்ட செயலாகவே காணப்படுகிறது.

வருகின்ற தகவல்களின் படி அந்த சம்பவம் நடைபெறுவதற்கு மூன்று நாள்களுக்கு முன் உயிரிழந்த நபர் அவர்களுடன் முரண்பட்டுள்ளார்.

என்னைப் பொறுத்தவரை வியாழேந்திரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விடயம். இது தொடர்பில் வியாழேந்திரன் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளிப்படுத்துவதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

இதனை சட்ட ரீதியாகப் பார்க்கின்ற போது அமைச்சர் கூறுகிறார் நான் அங்கு இருக்கவில்லை என்று. ஆனால் அவர் 12 மணி வரை வீட்டில் இருந்ததற்கான ஆதாரம் இருக்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.

# நெடுந்தீவில் கொரோனா பயணத் தடை பாதித்த 50 குடும்பங்களுக்கு நிவாரணம்!





பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் சிவஞானம் சிறீரங்கனின் நிதி உதவியில் நெடுந்தீவில் 50 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் வழிப்படுத்தலில், சிறிதரன் எம்.பியின் நெடுந்தீவு இணைப்பாளரும் தமிழரசுக் கட்சியின் நெடுந்தீவுக் கிளை தலைவருமான மதுவண்ணன் (சுதன்) அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டில் அமுலில் இருந்த பயணத்தடை காரணமாக வறிய மக்கள் கடும் சிரமத்தை எதிர்நோக்கி உள்ளனர்.

பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் பட்டினியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் மக்களின் வறுமையைப் போக்கும் விதமாக புலம் பெயர் உறவுகள் தனிப்பட்ட ரீதியாகவும், ஊர்சங் கங்களின் ஊடாகவும், நிறுவனங்களின் ஊடாகவும் பல விதமாக உதவி வருகின்றனர்.

# பயணத்தடை காலத்தில் வேறுபிரதேசத்தவர் தங்கினால் அடைக்கலம் கொடுப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட உதயசூரியன் மற்றும் மகிழங்கேணி கிராமங்களில் பயணத்தடை வேளைகளிலும் வேறு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தங்கி நின்று சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில் –

சாவகச்சேரி நகரசபையின் கொல்களத்திற்கு பின்பாக காணப்பட்ட நகரசபைக்குச் சொந்தமான பொருள்கள், ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான பொருள்கள், எல்லைப்படுத்தல் கம்பங்கள் ஆகியன நாளுக்கு நாள் திருடப்பட்டு வருகின்றன.

இவ்வாறான திருட்டு மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகளை சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட உதயசூரியன் மற்றும் மகிழங்கேணி கிராமங்களில் தற்காலிகமாக தங்கியிருக்கும் ஒரு சிலர் செய்கின்றனர்.

பருத்தித்துறை, சுன்னாகம், சூறாவத்தை மற்றும் மந்துவில் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தான் சாவகச்சேரியில் தங்கி நின்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

மகிழங்கேணி மற்றும் உதயசூரியன் கிராமத்தவர்களோடு சிறைச்சாலைகளில் ஏற்பட்ட நட்பே அவர்களின் வருகைக்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால் உறவினர்கள் என பொய் கூறி வசித்து வருகின்றனர். இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபை, பொலிஸார் மற்றும் உரிய கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாவகச்சேரி – உதயசூரியன் கிராமம் படிப்படியாக திருத்தமடைந்து அபிவிருத்தி அடைந்து வரும் நிலையில் இவ்வாறான சமபவங்களுக்கு இடமளித்து மீண்டும் அபாயகரமான பிரதேசமாக அப் பகுதியை மாற்றக்கூடாது. – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தமை போன்ற செயலே எரிபொருள் விலையேற்றம்!

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் காட்டம்



கொரோனா நோயால் பீதியில் உண்ண உணவின்றி தத்தளிக்கும் இவ்வேளையில் திடீரென எரிபொருள்களின் விலைகளை அமைச்சர் உயர்த்தியமை மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த செயலைப்போன்றது என மட்டக்களப்புமாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக மேலும் கருத்து கூறுகையில் –

தற்போதுள்ள நிலைமை இலங்கை முழுவதும் கொரோனா பரவல் ஏற்பட்டு பயணத் தடையால் வெளியில் எந்த தொழிலுக்கும் செல்லமுடியாமல் மக்கள் வீட்டில் முடக்கப்பட்டுள்ளனர்.

அன்றாடம் கூலித்தொழில் செய்யும் தொழிலாளர்கள் உழைப்பின்றி ஒருவேளை உணவுகூட இல்லாமல் கஷ்டப்படுகின்றனர்.

இவ்வாறான இக்கட்டான நாடு திண்டாடும் காலத்தில் எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் அனைத்துப் பொருள்களின் விலையும் ஐந்து தொடக்கம் பத்து வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

சாதாரண மக்கள் ஓட்டோவில் பிரயாணம் செய்யக்கூட முடியாமல் உள்ளனர். ஊர் உலகம் எல்லாம் கொரோனா நோயால் திண்டாடும் இவ்வேளையில் மக்களின் கவனத்தை எல்லாம் கொரோனாநோய் பயணத்தடை மீது செலுத்திவிட்டு, யாருக்கும் தெரியாமல் எரிபொருள் விலைகளை அதிகரித்தமை இந்த அரசாங்கத்தின் கபடத்தனமான செயலாகும்.

உடனடியாக மக்கள்மீது அரசாங்கத்துக்கு அக்கறை இருப்பின் ஓர் அவசர கால–நிலையில் எந்த ஒரு பொருள்களுக்கும் விலைகளை கூட்டாமல் விலைகளை குறைப்பதுதான் நல்நோக்கம் கொண்ட அரசின் கடமை. ஆனால் இது மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிக்கும் செயல் எனவும் மேலும் கூறினார்.

# சாவகச்சேரி இந்து 83 சாதாரணதர மாணவர்களால் லயன்ஸ் ஊடாக புங்குடுதீவில் உலருணவு வழங்கல்







சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் கல்விப் பொது சாதாரண தர வகுப்பில் 1983 ஆம் ஆண்டு கல்வி கற்ற பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் புங்குடுதீவு 7 ஆம், 8 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் பயணத் தடை காரணமாக வாழ்வாதாரம் இழந்த குடும்பங்களுக்கு நேற்று (வியாழக்கிழமை) உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி க.பொ.த. சாதாரண தர பழையமாணவனும் சாவகச்சேரி லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினருமாகிய லயன் ஆர்.ஜெயபாலனின் ஒழுங்கமைப்பில் சாவகச்சேரி, உரும்பிராய், வடக்கு, யாழ்.நுழைவாயில், யாழ்ப்பாணம் நகரம் ஆகிய லயன்ஸ் கழகங்கள் இணைந்து இந்த உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தன. 1,500 ரூபா பெறுமதியிலான பொருள்கள் சுமார் 50 குடும்பங்களுக்கு வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# சிதைந்துபோன தேசத்தைக் கட்டியெழுப்புவதே ரணில் விக்கிரமசிங்கவின் முக்கிய நோக்கமாகும்

## ருவான் விஜேவர்தன தெரிவிப்பு

சிதைந்த தேசத்தை கட்டியெழுப்புவதே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமென கட்சியின் துணைத் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

கட்சி தலைமையகத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

நாங்கள் ஒரு தேசிய கொள்கையை கொண்டு வர முயற்சிக்க அவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளோம்.

இது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் முழு நாட்டுக்கும் ஒரு குறிப்பிடத்தக்க நாள். – எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்கட்சித் தலைவராக்குவதைவிட இந்த நாட்டின் ஜனாதிபதியாக்குவதே தமது கட்சியின் கவனம் என கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.



# மட்டக்களப்பில் அதிக பகுதிகள் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டன

மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) காலை மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஏழு தினங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,026 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமையுடன் சராசரியாக நாளொன்றுக்கு 150 பேர் வீதம் இனங்காணப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 24மணி நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 178 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியான அதிகரிப்புக்கு காரணம் ஒன்றுகூடல்கள் எனவும் ஒன்றுகூடல்களை தவிர்ப்பதன் மூலமே தொற்றைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# வேள்விக்குக் கூடிய 30 நபர்கள் அல்வாயில் தனிமைப்படுத்தலில்

## ஆலய நிர்வாகிக்கு எதிராக வழக்கு



அல்வாயில் தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளை மீறி அதிகளவானோர் முகக்கவசம் இன்றியும் சமூக இடைவெளியைப் பேணாமலும் ஒன்றுகூடி வேள்வி மற்றும் பொங்கலை நடத்திய சம்பவத்தையடுத்து விறுமர் கோயில் நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அல்வாய் வடக்கு விறுமர் கோயில் பொங்கல் மற்றும் வேள்வி நிகழ்வில் 500 பேருக்கு மேற்பட்டவர்கள் ஒன்று கூடி தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்காமல் நடத்தியுள்ளனர்.

சுகாதாரப் பகுதியினரின் அனுமதிகள் எதுவும் பெறப்படாது இவ்வாறு அதிக அளவான எண்ணிக்கையில் பக்தர்களை ஒன்று கூட்டி கொரோனா வைரஸ் பரவலுக்கு ஏதுவான நிலையைத் தோற்றுவித்தமை தொடர்பாக முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் பருத்தித்துறை பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட விசாரணையில் சட்ட விதிமுறைகளை மீறுவதற்கு காரணமாயிருந்த கோயில் நிர்வாகியும் அதனோடு இணைந்து செயற்பட்ட ஏனைய 30 பேரும் உடனடியாக சுய தனிமைப்படுத்தப்பட்டனர்.

அத்துடன் ஆலய நிர்வாகி மீது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களதும் பொலிஸாரதும் கடமைக்கு இடையூறு விளைவித்து அச்சுறுத்தல் விடுத்த அப்பகுதி இளைஞர் ஒருவரைக் கைது செய்ய முற்பட்ட வேளை அவர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

அவர் தொடர்பான காணொலி மற்றும் ஒளிப்பட ஆதாரங்களைக் கொண்டு அவரை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸார் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு பொதுமக்கள் பொறுப்பற்ற விதமாக ஒன்றுகூடல்களை மேற்கொள்கின்றமையால் அதிகளவாக நோய்த்தொற்று பரவல் ஏற்பட்டு தேவையற்ற இழப்புகளை சமூகம் எதிர்நோக்க வேண்டிவரும் என சுகாதாரத் துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனாவிலிருந்து பெண்களை கொழுந்து பறிக்க அழைப்பரா?

## வடிவேல் சுரேஷ் கேள்வி

நாட்டு மக்கள் கொவிட் தொற்றிலிருந்து மட்டுமல்ல பட்டினியில் கிடந்து சாகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர் –

நாட்டில் தற்போது நிலவுகின்ற நெருக்கடி மிக்கச் சூழலில் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். விசேடமாக மலையக மக்கள் திட்டமிட்டு அரசாலும் பெருந்தோட்டக் கம்பனிகளாலும் முழுமையாக ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர்.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்குப் பின்னர் பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் வேலை நாள்களைக் குறைத்து வேலைச் சுமைகளை அதிகரித்துள்ளதால் இன்று பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களாக பெருந்தோட்ட மக்களே உள்ளனர்.

நாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. இதனால் பெருந்தோட்டப் பகுதிகளில் மிகவும் பின்தள்ளப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அரசு பொறுப்பு வாய்ந்த அரசு என்றால் இந்த மக்களுக்கு நிவாரணத்தை வழங்கியிருக்கலாம். இந்த நாடு தற்போது எங்கே சென்றுகொண்டிருக்கின்றது? மலையகத்தில் கொழுந்து பறிப்பதற்கும் சீனாவிலிருந்து பெண்களை அழைத்துவரப் போகின்றனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. – என்றார்.

# மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன

நாட்டின் மேலும் சில பகுதிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் குருநாகல் மாவட்டங்களின் சில பகுதிகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, யாழ்ப்பாணம் மாவட்டத்தின் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவின், குருநகர் மேற்கு மற்றும் ரெக்ளமேசன் மேற்கு முதலான கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல மட்டக்களப்பு மாவட்டத்தில், காத்தான்குடி பொலிஸ் பிரிவின் மஞ்சந்தொடுவாய் வடக்கு கிராம சேவகர் பிரிவு மற்றும் மஞ்சந்தொடுவாய் தெற்கு கிராம சேவகர் பிரிவின் ஜின்னா வீதியும் மண்முனை பொலிஸ் பிரிவின் மாமாங்கம் கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் குருநாகல் மாவட்டத்தில், இழுப்பு கெதர கிராம சேவகர் பிரிவின் வில்கொட கிராமமும் கனுக்கெட்டிய கிராம சேவகர் பிரிவின் கனுக்கெட்டிய கிராமமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## கத்தரிக்காய் செய்கைக்கான உரப்பயன்பாடு

| வகை | உரப் பாவனைக்காலம் | உரத்திற்கான மூலம் | | | பிரயோகிக்க வேண்டிய உரத்தின் அளவு | | |
|---|---|---|---|---|---|---|---|
| சுண்ணாம்பிடல் | விதைப்பு/நடுகைக்கு 2 வாரத்திற்கு முன் | தொலமைற் | | | 800 கிலோ/ஏக்கர் | | |
| சேதனப் பசளை | விதைப்பு/நடுகைக்கு 3-5 நாட்களுக்கு முன் | உக்கிய கோழி எரு அல்லது அல்லது மாட்டெரு அல்லது கூட்டெரு | | | 4000 கிலோ/ஏக்கர் | | |
| அசேதனப் பசளை | | உரத்திற்கான மூலம் மற்றும் பிரயோகிக்க வேண்டிய உரத்தின் அளவு ஏக்கருக்கு | | | போசணையளவு | | |
| | | Urea | TSP | MOP | N | P205 | K20 |
| | விதைப்பு/நடுகைக்கு முன் | 30 கிலோ | 130 கிலோ | 35 கிலோ | 15 கிலோ | 60 கிலோ | 20 கிலோ |
| | விதைப்பு/நடுகைக்கு 1 மாதத்திற்கு பின் | 30 கிலோ | | | 15 கிலோ | | |
| | விதைப்பு/நடுகைக்கு 2 மாதத்திற்கு பின் | 30 கிலோ | | | 15 கிலோ | | 20 கிலோ |
| | விதைப்பு/நடுகைக்கு 3 மாதத்திற்கு பின் | 30 கிலோ | | | 15 கிலோ | | |
| | | 120 கிலோ | 130 கிலோ | 35 கிலோ | 90 கிலோ | 60 கிலோ | 40 கிலோ |

ப.ராஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

### சகல அரசியல் கைதிகளை விடுவிப்பதோடு

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் விலக்க வலியுறுத்துகின்றது தமிழ் மக்கள் கூட்டணி!



நீண்டகாலமாகச் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல்கைதிகளில் பதினாறு பேரை அரசு விடுவித்துள்ளதை வரவேற்கிறோம். அதேபோல ஏனைய அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுவிக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம். அத்தோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணி கோரியுள்ளது.

அக்கட்சியின் சார்பில் அதன் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன் வெளியிட்ட அறிக்கையில் இது தொடர்பாக மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:–

அரசியல் கைதிகளின் இந்த விடுதலை என்பது அவர்கள் இவ்வளவு காலமும் சிறை வைக்கப்பட்டிருந்தமை வெறும் அரசியல் நோக்கன்றி வேறல்ல என்பதை எடுத்துக் காட்டுகிறது. இவர்கள் சிறையில் அனுபவித்த வேதனை இவர்களுக்கும் இவர்களது குடும்பத்தினர்க்கும் மட்டுமன்றி நீதியை நேசிக்கும் அனைவருக்கும் வேதனை தரும் விடயமாகும். இவை யாவற்றுக்கும் அடிப்படையாக அமைவது மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டமாகும். எனவே இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி அனைத்து மக்களுக்கும் நீதியும் ஜனநாயக உரிமைகளும் கிடைக்க வேண்டுமெனில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுதல் வேண்டும். சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்கான ஒரு குறுங்கால நடவடிக்கையாக இன்றைய விடுதலை அமையாது, உண்மையான நீதிக்கானதாக அமைவதை அரசு உறுதிப்படுத்துவதற்கு

இச்சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும். இவர்களின் விடுதலைக்கு நீதியையும் மனித உரிமையையும் நேசிக்கும் அனைத்துத் தரப்புகளுமே பங்களித்துள்ளன. இவ்வாறு பங்களித்தது போல விடுதலையாகும் அவ்வுறவுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நாம் ஒன்றுபட்டுச் செயற்படுவோம். – என்று உள்ளது.

## தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பை வரவேற்கிறது தமிழ்த் தேசியக் கட்சி



தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பை வரவேற்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதன் விவரம் வருமாறு:–

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்ட 35 அரசியல் கைதிகளில் 16 பேர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி இருக்கின்றமையை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். இவர்களை விட, மேலும் 19 தமிழர்கள் தண்டனைக் கைதிகளாக உள்ளனர். இவர்களில் சிலரின் மேன்முறையீடுகள் நிலுவையில் உள்ளன. இவர்கள் அனைவருக்கும் மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வருகின்றது.

இந்த கைதிகளின் விடயத்தில் குற்றங்கள் வேறுபட்டிருந்தாலும் அவற்றின் பின்னணி ஒன்றேதான். எனவே இவர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவதே நீதியானதாகும்.

மேன்முறையீடு செய்திருப்பவர்களின் விடயத்தில் மேன்முறையீடுகளை மீளப் பெறுவதன் ஊடாக பொது மன்னிப்புக்கான தடையினை அகற்ற முடியும். இதே வேளையில், வழக்கு விசாரணையை நீண்ட பல வருடங்களாக சந்தித்து வந்திருக்கும் 38 கைதிகளைப் பொறுத்த மட்டில், வழக்குகளை சட்ட மாஅதிபர் கைவிடுவதன் ஊடாக அவர்கள் விடுதலை செய்யப்பட முடியும். இதே போல, குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படாமல் சில வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும், 116 கைதிகளுக்குப் பிணை வழங்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் அல்லது அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கடந்த 42 வருட காலத்தில், இந்த பொது மன்னிப்பு ஒரு நல்ல ஆரம்பமாகும். இந்த பொது மன்னிப்புக்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் பயங்கரவாத தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட கைதிகளில் சிலருக்காவது விடுதலை கிடைத்துள்ளது என்பதை வரவேற்பதே பொருத்தமானதாகும்.

இதே வேளையில் எஞ்சியிருக்கும் மொத்தம் 173 கைதிகளின் விடுதலைக்காக அக்கறையுள்ள அனைவரும் தொடர்ந்து தீவிரமாகக் குரல் கொடுக்க வேண்டும். – என்று உள்ளது.

## நீதி இல்லாத நாட்டில் சூரியன் உதிக்காது

### பாரத லக்ஸ்மனின் மனைவி சாபம்; துமிந்தவின் விடுதலைக்கு எதிர்ப்பு

கொலையாளியை விடுதலை செய்து, நீதியை சிறை வைத்துள்ளனர். நீதி இல்லாத நாட்டில் சூரியன் உதிக்காது.

– இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மனைவி சுமனா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலை வழக்கில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பின் கீழ் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மனைவி கடும் எதிர்ப்பை வெளி யிட்டுள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரும், உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஐவரும் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப் படுத்தாத நாடு. ஒரு நாடு பல சட்டங்கள் உள்ளன என்பது இந்த விடுதலை மூலம் உறுதியாகியுள்ளது எனவும் அவர் சமூக வலைத்தளத்தில் விமர்சித்துள்ளார்.

## ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் ஜனாதிபதி

### விடுதலையான ஜெயச்சந்திரன் கோரிக்கை

(இ.கலையமுதன்)



எமது விடுதலைக்காகச் செயற்பட்ட அனைவருக்கும் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன். ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– இவ்வாறு யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் இருந்து நேற்று விடுதலையான தமிழ் அரசியல் கைதி சூரியகாந்தி ஜெயச்சந்திரன் கோரிக்கை விடுத்தார்.

## விடுவிக்கப்பட்ட கைதிகளின் பெயர் விவரம்

| இல | தொடர் இல | பெயர் | கைது திகதி | தீர்ப்பு | தண்டனைக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | V 713 | மயில்வாகனம் மதியழகன் | 30.05.2007 | 14.11.2017 | 6 years |
| 2 | V 756 | சிமியோன் சந்தியோகு | 20.07.2011 | 06.12.2017 | 7 years |
| 3 | V 757 | ராகவன் சுரேன் | 24.04.2009 | 06.12.2017 | 7 years |
| 4 | V 758 | சிறி ராகமணி | 11.12.2012 | 06.12.2017 | 7 Years |
| 5 | V 760 | எம்.எம்.அப்துல் சலீம் | 13.12.2011 | 06.12.2017 | 7 years |
| 6 | V 761 | சந்தானம் ஸ்டாலின் ரமேஷ் | 23.01.2012 | 06.12.2017 | 7 years |
| 7 | V 762 | நடராசா சரவணபவான் | 26.08.2009 | 06.12.2017 | 7 years |
| 8 | X 25 | இராசதுரை ஜெகன் | 17.05.2009 | 10.01.2019 | 5 years |
| 9 | X 26 | நல்லான் சிவலிங்கம் | 05.10.2009 | 10.01.2019 | 5 years |
| 10 | X 42 | புருஷோத்தமன் அரவிந்தன் | 21.07.2009 | 16.01.2019 | 5 years |
| 11 | X 43 | இராசவல்லவன் தபோரூபன் | 28.06.2009 | 16.01.2019 | 5 years |
| 12 | X 63 | சூரியகாந்தி ஜெயச்சந்திரன் | 25.09.2010 | 22.01.2019 | 5 years |
| 13 | X 64 | சிவப்பிரகாசம் சிவசீலன் | 26.08.2009 | 22.11.2019 | 5 years |
| 14 | X 20627 | எட்வேட் ஜூலின் | 31.04.2016 | 20.09.2014 | 3 years |
| 15 | U 440 | விஸ்வநாதன் ரமேஷ்குமார் | 09.08.2008 | 10.08.2016 | 17 years |
| 16 | Q 839 | சூரியமூர்த்தி ஜிபோயன் | 18.05.2009 | 19.10.2016 | 14 years |